கிருஷ்ணதேவராயர்

M. H.
1027

K. S. நாகராஜன்

கிருஷ்ணதேவராயர்

K. S. நாகராஜன்
விவேகானந்தர் கல்லூரி, மயிலை, சென்னை.

ராம்நாத் பப்ளிஷிங் ஹவுஸ்
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

 [விலை அணு 15

முதற் பதிப்பு—நவம்பர் 1952

Kabeer Printing Works, Madras (2109)

முன்னுரை

விஜயநகரப் பேரரசு மறைந்து பல நூற்றுண்டுகள் கழிந்தன. ஆயினும் அவற்றின் அழியாச் சின்னங்கள் இன்றும் நம் சிந்தனையைத் தூண்டுகின்றன. இப்பேரரசின் ஆதரவில் தேசீய வாழ்க்கையின் ஒவ்வொரு துறையும் முன்னேற்றம் அடைந்தது; சமயம், இலக்கியம், நுண்கலை, அரசியல் ஆகிய யாவும் மேம்பாடுற்று விளங்கின. ஆகவே, மறைந்து போன இப்பேரரசு என்றும் நம் மனத்தில் நிலைத்து நிலவும் என்பது ஒருதலை.

கி. பி. 14 ஆம் நூற்றுண்டில் தென்னிந்தியா முகமதியர் ஆதிக்கத்தின்கீழ் வராது தடுக்கும் பொருட்டு இப்பேரரசு தோன்றியது. முகமதியர் இடையருது இழைத்த இன்னல்களால் சீறியெழுந்த இந்துக்கள் தமக்குள் ஒன்றுபட்டு எங்ஙனமாயினும், முகமதியர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது என்று துணிந்தனர். இதன் விளைவாகத் தோன்றியதே விஜயநகரப் பேரரசு.

விஜயநகர அரசர்களுள் தலைசிறந்து விளங்கியவர் கிருஷ்ணதேவராயர் ஆவார். அவருடைய புகழ் இந்திய சரித்திரத்தில் உயர்ந்த இடம் பெறும் என்பதில் ஐயமில்லை. அவர் பட்டத்திற்கு வந்ததும், தம் முன்னோர் இழந்திருந்த நாடுகளை எல்லாம் மீட்டுத் தம் வசமாக்கிக் கொண்டார். ஒரிஸா, பீஜபூர் ஆகிய நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று, அவற்றைத் தம் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தார். அவருடைய அரசாட்சி வடக்கே கிருஷ்ணுநதி முதல் தெற்கே குமரிமுனை வரையில் பரவியிருந்தது. அவர்

அறிவும் ஆற்றலும் மிக்கவராதலால் அவர் காலத்தில் அரசாங்க நிருவாகம் திறம்பட நடைபெற்றது. பண்பாடு மிக்க கிருஷ்ணராயர், பல மொழிப் புலவர்களையும் ஆதரித்து வந்தார். அவர் சமயத்துறையில் மக்களுக்கு முழுஉரிமை அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் காலத்தில்தான் போர்த்துகீசியர் மேற்கு இந்தியாவில் தம் அதிகாரத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வாறுக, எவ்வகையில் நோக்கினும் கிருஷ்ணராயருடைய குணநலன்களும், அரசியல் திறமையும் சிறந்து விளங்கின.

இங்ஙனம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய கிருஷ்ணதேவராயரைப் பற்றியது இச்சிறு நூல். 'மறைந்த மாநகர்' எனச் சரித்திர ஆசிரியர்களால் பலபடப் புகழப்படுகின்ற ஹம்பியைக் கண்டு சிந்தித்ததன் பயனாக இந்நூலை எழுத யான் முனைந்தேன். இந்நூல் எழுதுவதில் பல சரித்திர நூல்கள் எனக்குப் பயன்பட்டன. இந்நூலை எழுதுவதில் எனக்குப் பேருதவி புரிந்த நண்பர்கட்கு என் நன்றி உரித்தாகுக.

K. S. நாகராஜன்

பொருளடக்கம்

அரசர் மரபுப் பட்டியல்

- சந்திரன்
  - யயாதி
    - யது
    - துர்வாசு (துளுவ)
      - தேவகி = திம்மா (திருமல தேவர் I)
        - ஈஸ்வரன் = புக்கம்மா
          - நரசநாயகன் (1505—1506) (நரசிம்மன்)
            - வீர நரசிம்மன் (திப்பாஜி மூலம்) (1505—1509)
            - கிருஷ்ணதேவராயன் (நாகலாதேவி மூலம்) (1509—1529)
              - திருமலைதேவராயன்
              - புதல்வன் (பெயர் தெரியவில்லை)
              - திருமலம்பா = அளியராமராயன் (அரவீடு வமிசம்)
            - அச்யுத தேவராயன் (ஓபாம்பா மூலம்) (1529—1542)
              - வெங்கடன் I
            - ரங்கன் (ஓபாம்பா மூலம்)
              - சதாசிவராயன் (1542—1570)
          - திருமலதேவர் II



கிருஷ்ணராயரும் அவரது இரு பட்டத்தரசியரும்
(உலோகச் சிலைகள்)

கிருஷ்ணதேவராயர்

1. தோற்றுவாய்

இந்துக்களின் மறைந்துகிடந்த உணர்ச்சியைத் தட்டி எழுப்பி அவர்களை ஆவேசம் கொள்ளும்படி தூண்டக்கூடிய பலவித நிகழ்ச்சிகள் தென்னிந்தியாவில் பதின்மூன்ருவது நூற்ருண்டின் பிற்பகுதியில் நடந்தன. பல நூற்ருண்டுகளாகச் சுதந்திரமாக வாழ்ந்துவந்த இந்து அரசர்களுக்குத் திடீரென ஒரு பேராபத்து தோன்றிற்று. அவ்வாபத்தின் உண்மை உருவம் 68 ஆண்டுகளாக அடிமைகளாக வாழ்ந்த பின்னர்தான் இந்துக்களுக்குத் தோன்றியது. ஆனுல் அந்நூற்ருண்டின் இறுதியில் உள்ளம் கொதித்து எழுந்த இந்துக்கள் ஏறத்தாழ இருநூறுவருட காலத்திற்கு அன்னிய ஆட்சியே தென்னிந்தியாவில் தலையெடுக்காமல் செய்துவிட்டனர். இம்முறையாகத்தான் நம்மனத்திரையிலிருந்து மறைந்து போயுள்ள தென்னிந்தியாவில் தலைசிறந்த ஒரு பேரரசு உருப்பெற்றது.

நாட்டின் நிலைமையை நிலைகுலையச் செய்யும் வகையில் அன்னியர்களிடமிருந்து பல ஆபத்துகள் தோன்றின. தக்காணத்திற்குள் அல்லாவுத்தீன் கில்ஜீயும் அவருக்குப்பின் மாலிக்கபூரும் புகுந்தனர். அதன் விளைவாகத் தென்னிந்தியாவில் ஆண்டுவந்த மூன்று பெரிய இந்து அரச வம்சங்களும் அழியத் தலைப்பட்டன. அவையாவன : தேவகிரியில் ஆண்டு

வந்த யாதவவமிசம், வாரங்கலில் ஆண்டுவந்த காகதீயவமிசம், துவாரசமுத்திரத்தில் ஆண்டுவந்த ஹோய்ஸாலவமிசம். கி. பி. 1320ஆம் ஆண்டில் கில்ஜி வமிசத்தாரைத் தோல்வியுறச் செய்து துக்ளக் வமிசத்தினர் அரசுபெற்றனர். முகமது துக்ளக் அரசாண்டபோது அவரது மாகாணங்களில் இருந்த தலைவர்கள் பலர் அவரை மதியாது தாங்கள் சுதந்திர அரசர்கள் என்று பறைசாற்றிக்கொண்டனர். இம் முறையில் வங்காளம், குஜரத், மூல்டான் ஆகிய அரசுகள் தனியுரிமை பெற்றன. வாரங்கலில் முன்னர் அரசுபுரிந்துவந்த இந்து அரசர்கள் தங்களுடைய ஏகாதிபத்தியத்தை மறுபடியும் நிலை நிறுத்தினுர்கள். ஹாஸன்கங்கு என்ற ஆப்கன் அடிமை தம்மை தக்காணத்தின் அரசன் என்று பறைசாற்றிக்கொண்டார். இவ்விதம் தக்காணத்தில் குழப்பமும் அராஜகமும் தலைவிரித்தாடிய சமயத்தில் ஒரு வலிமிக்க புதிய அரசு தோன்றுவது இன்றி யமையாததாயிற்று.

வாரங்கல் அரசாங்கத்தில் பெரும்பதவியேற்று வந்த ஹரிஹரன், புக்கன் என்ற இரு சகோதரர் களும் துள்ளியெழுந்து, பலமிழந்து கிடந்த இந்து அரசர்களைத் தட்டியெழுப்பி, அவர்களை ஒன்று சேர்த்து விஜயநகரப் பேரரசை கி. பி. 1336-இல் ஏற்படுத்தினர். இவ்வாறு தோன்றிய பேரரசு, பரப்பிலும் முக்கியத்துவத்திலும் வெகு விரைவில் வளரலாயிற்று. ஹரிஹரனுக்குப் பின்வந்த அவ னுடைய சகோதரனை புக்கன் தலைநகரை நிர்மாணித்து அதற்கு வெற்றிநகர் என்னும் பொருள் பட விஜயநகரி என்று பெயரிட்டார். ஹரிஹரன், புக்கன் ஆகிய இருவரும் தங்களை அரசர்கள் என்று

சொல்லிக்கொள்ளவில்லை. அவர்கள் மக்களின் தலைவர்களென்ற முறையில் உடையார், மஹாமண்டலேசுவரர் என்ற பட்டங்களையே ஏற்றுக்கொண்டனர். புக்கனுடைய குமாரரான இரண்டாம் ஹரிஹரன்தான் முதன் முதலில் அரசபதவி ஏற்றவர். அவர் தென்னிந்தியாவிலுள்ள பெருங்கோயில்களுக்குச் சென்று, ஆங்காங்குப் பல அறப்பணிகள் செய்வித்தார். இதையெல்லாம் உள்ளத்திற்கொண்டே ரைஸ் என்ற சரித்திர ஆசிரியர் "இரண்டாம் ஹரிஹரனுடைய அரசு வடக்கே கர்னூலிலிருந்து தெற்கே கும்பகோணம் வரையிலாவது பரவியிருந்திருக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

இவ்வமிசத்தில் விளங்கிய மிகப்பெரிய அரசன் **இரண்டாம் தேவராயன்** என்பவர். இவர் தமது அரசைத் தென்னிந்தியா முழுவதும் பரப்பினார். சிங்களம், பெகு, தெனஸரின், புலிக்கோட்டை, கொல்லம் ஆகிய நாட்டு மன்னர்களும் அவருக்குக் கப்பம்கட்டி வந்தனர். பாமினி சுல்தானுடன் இரண்டாம் தேவராயன் ஒரு பெரும் போரை நிகழ்த்தினார். விஜயநகரப் பேரரசுக்கும் பாமினி சுல்தான்களுக்குமிடையே கி. பி. 1366-இல் தொடங்கிய இப்போர் ஏறத்தாழ இருநூற்றாண்டுகளுக்கு ஓயாமல் நடைபெற்று, இறுதியில் தலைக்கோட்டைப் போருடன் முடிவுற்றது.

இரண்டாம் தேவராயனுக்குப் பின் அரசு குழப்பத்தில் கிடந்தது. அவருக்குப்பின் வந்த அரசர்களிடம் அவருடைய நற்குணங்கள் காணப்படவில்லை. சுகபோகங்களிலேயே வாழ்வைக் கழித்துவந்த இவ்வரசர்கள் அரசாட்சியைத் தங்கள் முதலமைச்சனான **சாளுவநரசிம்மன்** என்பானிடம் ஒப்புவித்து

விட்டார்கள். அரசர்களுடைய பலவீனத்தால் நாட்டிற்குள்ளே கலகமும் வெளியிலிருந்து படையெடுப்பும் எளிதாயின. கஜபதி (ஒரிஸா) அரசன் குல்பர்க்கா சுல்தானுடைய உதவியைக்கொண்டு விஜயநகரை எதிர்த்தார். கீழக்கரையிலிருந்த உதயகிரி, கொண்டவிடு, ஆகிய மாகாணங்களைக் கைப்பற்றிக்கொண்டார்; முக்கிய துறைமுகங்களைத் தம் வசமாக்கிக்கொண்டு விஜயநகரத்தின் வெளிநாட்டு வியாபாரத்தை அழித்தார். இச்சமயத்தில் விஜயநகரத்தின் முதல் மந்திரியாயிருந்த சாளுவநரசிம்மன் தம் அரசனை 'பிரௌத தேவராயன்' என்பவரைத் தள்ளிவிட்டுத் தாமே அரசனாய்விட்டார். இவ்வாறு ஹரிஹரனால் தோற்றுவிக்கப்பட்ட சங்கமவமிசம் முடிவுற்றது.

சாளுவ வமிசத்திற்கும், மறைந்த சங்கம வமிசத்திற்கும் தொடர்பு உண்டு. சாளுவர்கள் முதலில் தென் கன்னடத்திலுள்ள சங்கீதபுரத்தைத் தலை நகராகக் கொண்டு பதின்மூன்றும் நூற்றாண்டு முதல் அரசு புரிந்தனர். அவர்களில் ஒரு சிலர் விஜயநகர மன்னர்களின் உதவியைப்பெற்று கீழ்க்கடற்கரையில் வாழ்ந்துவந்தனர். இவர்கள் வமிசத்தவனே சாளுவநரசிம்மனும். சாளுவநரசிம்மனைப் பற்றிய பல ரசமான செய்திகள் நமக்குத் தெரியவருகின்றன. நரசிங்கன் (நரசிம்மன்) மிக்கப் பலம்பொருந்திய அரசன் என்றும், அவருடைய அரசு கர்நாடகம் முதல் தெலிங்காணா வரை பரவியிருந்தது என்றும் பெரிஷ்டா கூறுகிறார். மாஸிர் என்ற ஆராய்ச்சியாளர் "தெலிங்காணா, விஜயநகர் ஆகியவற்றின் அரசர்களில், நரசிம்மன் தான் மிக்க ஆற்றல்வாய்ந்தவர், பெருமை பெற்றவர்" என்று எழுதியிருக்கிறார்கள். அவர் ஒரிஸா நாட்டு

மன்னனையும் குல்பர்க்கா சுல்தானையும் போரில் முறியடித்தார். இதனால் அவன் சிறந்த ஆற்றல் வாய்ந்தவனாய் இருந்திருக்கவேண்டும் என்று எண்ண இடமிருக்கிறது.

பட்டத்திற்கு வந்தவுடன் நரசிம்மன் நாட்டிலிருந்த கலகங்களையும் அராஜகத்தையும் ஒழிக்கத் தலைப்பட்டார். நாட்டில் குழப்பமாயிருந்தபோது நிலங்களைக் கைப்பற்றிக் கொண்ட பிரபுக்களை எல்லாம் அடக்கி அவர்களுடைய நிலங்களைத் தம் அரசில் சேர்த்துக் கொண்டார். உதயகிரி, கொண்டவிடு, ரெய்ச்சூர், ஆகியவை தவிர அவர் முன்னோர் வசமிருந்த மாகாணங்கள் யாவும் அவர் வசமாயின. நாட்டில் அமைதியும் நீதியும் நிலவின. சாளுவ நரசிம்மன் இறக்கும்போது அவருக்கு இரண்டு சிறு புதல்வர்கள் இருந்தனர். அவர்களைத் தன் சேனாதிபதியான நரச நாயக்கன் அல்லது துளுவ நரசிம்மன் என்பானிடம் ஒப்புவித்தார்.

வயதடைந்து பட்டத்திற்கு வந்த சில மாதங்களுக்குள் நரசிம்மனின் மூத்த மகன் ஒரு எதிரியால் கொலையுண்டான். அதன் பின்னர், அவன் சகோதரனான இம்மடி நரசிம்மன் என்பான் பட்டத்திற்கு வந்தான். ஆற்றலும் தன்னம்பிக்கையும் இல்லாததால் அவர் அரசாட்சியை நரசநாயகனிடமே ஒப்புவித்தார். பேராசையால் தூண்டப்பட்ட நரசநாயக்கன் தன்னரசனைச் சதியாற் கொன்று தானே அரசனானார். சாளுவ நரசிம்மன் சங்கம வமிசத்தை அழித்து அரசு பெற்றது போலவே நரச நாயக்கன் சாளுவ வமிசத்தையழித்து அரசு பெற்றார். நாச நாயக்கன் கி. பி. 1505-இல் இறந்தவுடன், அவனுடைய மூத்த மகன் வீரநரசிம்மன் (புஜபல ப்ரதாபன்) அரசனானார். ஆறு

ஆண்டுகள் செவ்வனே ஆண்டபின்னர் அவர் இறக்க, அவருடைய சகோதரனுன கிருஷ்ணதேவராயன் விஜயநகரப் பேரரசின் சிங்காதனம் ஏறினுர். இவ் வரசனைக் கிருஷ்ணராயன் என்றும் குறிப்பிடுவ துண்டு. இவருடைய ஆட்சிக் காலத்தைத் 'தென் னிந்திய சரித்திரத்தின் ஒரு பொற்காலம்' என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

2. பிறப்பும் வளர்ப்பும்

துளுவ நரசிம்மனுக்கு அவனுடைய இரண்டாம் மனைவி மூலம் பிறந்தவர் கிருஷ்ணதேவராயன். இவர் பிறந்த ஆண்டு எது என்று துணிவாகக் கூற இயலவில்லை. வீரேசலிங்கம் பந்துலு என்ற பெரியார் இயற்றியுள்ள 'தெலுங்குக் கவிஞர்களின் சரிதை' என்ற காவியத்தில் கிருஷ்ணதேவராயன் சாலிவாகன சகம் 1377-இல் பிறந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறாயின், அவர் பிறந்த ஆண்டு கி. பி. 1455 ஆகிறது. ஆனால் சரித்திர உண்மைகள் யாவும் இதற்கு முரண்பாடாயுள்ளன. போர்த்துகீசிய சரித்திராசிரியர் நூனிஸ் என்பார் துளுவ வமிசத்து வீரநரசிம்மன் இறக்கும்போது, (கி. பி. 1509) அவருடைய இளைய சகோதரனான கிருஷ்ணதேவராயருக்கு இருபதுக்குச் சற்று மேற்பட்ட வயதிருக்கும்' என்று கூறுகிறார். இதன்படி ஆராய்ந்தால், கிருஷ்ணதேவராயர் ஏறத்தாழ கி. பி. 1485-6-இல் பிறந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. காவாலி வெங்கடராம சுவாமி என்பார் தாம் எழுதிய "தக்காணக் கவிஞர்களின் வரலாறு" என்ற நூலில் கிருஷ்ணதேவராயன் தன் நாற்பதாம் வயதில் சாலிவாகன சகம் 1446-இல் உயிர் துறந்தான்' என்று கூறுகிறார். கிருஷ்ணராயன் அவர் முடிவுப்படி கி. பி. 1483-இல் பிறந்து, கி. பி. 1523-இல் இறந்திருக்கவேண்டும். இது முற்றும் ஒப்புக் கொள்ளத்தக்கது அன்று. ஏனெனில் 1524-க்குப் பின்னர் எழுந்த கிருஷ்ணராயனது கல்வெட்டுக்கள் பல நமக்குக் கிடைத்துள்ளன. ஆனால் கிருஷ்ணராயன் நாற்பதாவது வயதில் இறந்தான் என்பதில் ஓரளவு உண்மை யிருக்கலாம். எவ்வாறாயினும், கிருஷ்ண

ராயன் கி. பி. 1483 முதல் 1486-க்குள் பிறந்திருக்க வேண்டும் என்று ஒருவாறு நாம் முடிவு செய்யலாம்.

கிருஷ்ணராயருடைய தாயான நாகலாம்பாள் நரசிம்மனுடைய முறையான மனைவியல்லள் என்றும், அதனால்தான் பிற்காலத்தில் பிரதாபருத்ர கஜபதி தன் மகளைக் கிருஷ்ணராயனுக்குக் கொடுத்து மணஞ் செய்விக்க மறுத்து விட்டாரென்றும் தெலுங்கரிடையே ஒரு கர்ணபரம்பரைச் செய்தி வழங்குகிறது. பல நாட்டுப் பாடல்களும் இக்கருத்தை ஆதரிப்பனவாக உள்ளன. வீரேசலிங்கம் பந்துலு தம் புத்தகத்தில் இக்கருத்தை விளக்கும் பல கல்வெட்டுக்களையும் குறிப்பிடுகிறார். ஆனால் அவை எங்கே காணப்படுகின்றன என்பதைத் தெளிவாக அவர் கூறாது போயினமையால் மேற்கொண்டு இதுபற்றிய ஆராய்ச்சி நடைபெற இயலாது போயிற்று.

துளுவ வமிசத்தைப் பற்றியும் அதிக விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. சங்கம வமிசமும் தூர்வாசு வழி வந்ததாகும். இவ்வமிசத்தில் சரித்திரப் பிரசித்திப் பெற்ற முதல் அரசன் கிருஷ்ணராயனின் தந்தையின் பாட்டனான திருமலைராயன். இவர் விஜயநகர அரசர்களிடத்து ஒரு திறை மன்னனாக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. தெலுங்கிலுள்ள 'வராஹ புராணம்' என்னும் நூல் இவருடைய தோள் வலியையும் வீரச் செயல்களையும் பலவாறாகப் புகழ்ந்து கூறுகிறது. திருமலைராயனுடைய புதல்வனான ஈசுவரன் என்பவன் சாளுவ நரசிம்மனுடைய அமைச்சனாகவும் சேனாதிபதியாகவும் இருந்து, தன் அரசனுக்குப் பல நாடுகளை வென்று தந்தார். ஈசுவரனுடைய புதல்வனான நரசராயன் துளுவ வமிசத்தை ஏற்படுத்தியவராவார். 'பாரிஜாதாபஹரணமு' என்

னும் தெலுங்கு நூல் இவனைப் பற்றிப் பின் வருமாறு கூறுகிறது.

"இவ்வரசன் குண்டலேசுவரனை வென்று வித்தியாபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான்; மாளவ துர்க்கத்தின் அரசனான பாராஸிகாது என்பவனைப் படுதோல்வி அடையச் செய்தான்; சோழ அரசனைப் போரில் கொன்றான்; பாண்டிய நாடான மதுரையைக் கைப்பற்றினான்; ஸ்ரீரங்கப்பட்டணத்து மன்னனான ஹவனேந்திரனைத் தன் அடிமையாக்கிக் கொண்டான்" இதுபோன்று பல பட்டயங்கள் இவருடைய வெற்றிகளைப் புகழ்கின்றன. ஒரு பட்டயம் பின் வருமாறு கூறுகிறது:

"நரசன் வெள்ளப் பெருக்கோடிருந்த காவிரியை அணையிட்டு, ஆற்றைக் கடந்து சென்று, தன் பகைவனை உயிருடன் பிடித்துவிட்டார். ஸ்ரீரங்கப் பட்டணத்தைக் கைப்பற்றி, அதைத் தம் இருப்பிடமாக்கிக் கொண்டார்; சேர சோழ பாண்டியர்களையும், வலிமிகுந்த துருஷ்கனையும், கஜபதி அரசனையும் வென்று கங்கை முதல் இலங்கை வரையிலும் கிழக்கு மலைத்தொடரிலிருந்து மேற்கு மலைத்தொடர் வரையிலும் இருந்த எல்லா அரசர்களையும் தமக்குக் கீழ்ப் படியுமாறு செய்தார்."

நரசராயன் சாளுவ நரசிம்மனின் முதல் மந்திரியாக இருந்தாரென்பதும், அவர் இறந்தபின் அவருடைய பிள்ளைகள் சிறுவர்களாயிருந்த போது, தாமே அரசாங்கத்தையேற்று நடத்தி வந்தார் என்பதும் முன்னரே கூறப்பட்டன. இவருக்கு மூன்று மனைவிமார் இருந்தனர். அவர்கள் மூலம் வீரநரசிம்மன் கிருஷ்ணராயன், அச்யுதராயன், ரங்கன் என்ற புதல்வர் நால்வர் இருந்தனர். ஆயினும் நரசநாயகன்

தம் இரண்டாவது பிள்ளை மீதுதான் பேரன்பு கொண்டிருந்தார். இக்கருத்திற்குப் பல பட்டயங்களும், கர்ண பரம்பரைச் செய்திகளும் வலுவூட்டுகின்றன. தெலுங்கிலுள்ள 'கிருஷ்ணராய விஜயம்' என்ற நூலில் நரசிம்மன் தம் மந்திரிகளின் ஆலோசனைக்கிணங்க கிருஷ்ணராயனுக்கு அரசுரிமை அளித்தார் என்றும், அவன் சிங்காதனம் ஏறியதை மிகுந்த மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் கொண்டாடினர் என்றும் கூறப்படுகிறது. இது சரித்திரத்திற்கு முரண்பட்டதாயினும், இச்செய்தியால் நரசிம்மனுக்குக் கிருஷ்ணராயன் மேலிருந்த தனியன்பு தெளிவாகிறது.

நரசிம்மன் சாகுந்தறுவாயில் தன் மகனைப் பராமரிக்கும் பொறுப்பைத் தம் அருமை அமைச்சனுன சாளுவ திம்மனிடம் ஒப்படைத்தான். திம்மனும் மிகுந்த ஊக்கத்துடன் இளவரசனைக் காத்து வந்தான்; அக்காலத்தில் வழக்கிலிருந்த சிறந்த போர் முறைகளிலும் இலக்கியத்திலும் கிருஷ்ணராயனுக்குப் பயிற்சி அளித்தார். கிருஷ்ணராயனுக்குத் திம்மன் மீது அளவு கடந்த அன்பு ஏற்பட்டது. இதன் காரணமாகத் திம்மனை இளவரசன் 'அப்பாஜி' (அப்பா) என்றே அழைத்து வந்தார். வீர நரசிம்மனுக்குத் தன் தம்பியின் அறிவையும், தன் தந்தைக்கு அவன் மீதிருந்த அன்பையும் காண, அவன் மீது பொருமை ஏற்பட்டது. தான் அரசனுன பின்பும் வீரநரசிம்மன் கிருஷ்ணராயனை வெறுத்தே வந்தான்; இறக்கும் தறுவாயில் தன் பிள்ளை பட்டத்திற்கு வர ஒரு சூழ்ச்சி செய்தார். கிருஷ்ணராயனுடைய இரு கண்களையும் குத்திக் குருடாக்கி விட்டால், அவன் என்றும் அரசுரிமையை இழந்தவனுவான் என்று எண்ணி, இக்கொடுஞ் செயலை நிறைவேற்றி வைக்கச் சாளுவ

திம்மனை நியமித்தார். ஆனால் திம்மனுக்கா கிருஷ்ண ராயனுடைய மதிப்பும் அறிவும் நற்குணங்களும் தெரியாது? அவர் அரசனுடைய கட்டளையைத் தவிர்த் ததும் அல்லாமல் நரசிம்மன் இறந்தவுடன் கிருஷ்ண ராயனைச் சிங்காதனமேறச் செய்து பட்டஞ் சூட்டு வித்தார். கிருஷ்ணராயன் அரசேற்ற ஆண்டைப் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. கிருஷ்ண ராயன் 37 ஆண்டுகட்கு அரசு புரிந்தார் என்றும், அவர் 22 ஆண்டுகளே அரசு புரிந்தார் என்றும் அவர் சாலிவாகன சகம் 1437 முதல் 1455 வரை அரசாண் டாரென்றும் பல்வேறு கருத்துக்கள் காணப்படு கின்றன. இவற்றுள், உண்மை எதுவென அறுதி யிட்டுக் கூறுவது கடினமாயினும், ஐரோப்பிய யாத்ரீ கர்களின் குறிப்புக்களாலும் சரித்திர ஆராய்ச்சியாளர் சிலருடைய முடிவுகளாலும் கிருஷ்ணராயன் கி. பி. 1509-இல் அரசேற்றார் என்று நாம் கொள்ள வேண்டி யிருக்கிறது.

3. அரசியல் சூழ்நிலை

கிருஷ்ணராயர் சிங்காதனமேறும்போது அவருக்கு வயது சற்றேறக் குறைய இருபது இருக்கும். அவர் அரசுரிமை பெற்றவுடனே தமக்கு எப்பொழுது எதிர்ப்பு வருமோ என்றஞ்சித் தம் சகோதரனை வீர நரசிம்மனின் மகனையும் தம் சகோதரர்களையும் சந்திரகிரிக் கோட்டையில் சிறை வைத்தார். வயதில் இளையவராதலால் சாளுவ திம்மனுடைய ஆலோசனையின்படி அரசு செலுத்தியது மட்டுமன்றி, வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த அவ்வமைச்சனிடமிருந்து ஓர் அரசன் கற்றுக் கொள்ளவேண்டிய கலைகள் அனைத்தையும் கற்றுக் கொண்டார். முக்கியமான சமயங்களில் அரசன் தன் நண்பர்களையும், அமைச்சர்களையும், உறவினரையும் புலவர்களையும் ஆலோசித்துத் தான் முடிவுக்கு வரவேண்டும் என்றும், ஓர் அரசன் எக்காலத்தும் தவிர்க்க வேண்டிய ஏழு கூறுகள், ஏழு முறைகள், ஏழு தீக்குணங்கள் ஆகியவை பற்றியும், திம்மன் கிருஷ்ணராயனுக்கு விளக்கமாகச் சொல்லித் தந்தார். இங்ஙனம் திம்மனிடம் பயிற்சி பெற்ற பின்னர், கிருஷ்ணராயன் அவருடன் தம் நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கினர். நாட்டிலிருந்த முக்கிய நகரங்களையும், கோட்டைகளையும் மட்டும் அரசன் சென்று பார்க்கவில்லை. சிறு கிராமங்களையும் தவருமற் சென்று பார்த்து, தம் குடிமக்களுடைய நிலைமையையும் குறைகளையும் நன்குணர்ந்தார். இவ்விதம் சுற்றுப் பிரயாணஞ் செய்து முடித்தவுடன் தலை நகருக்குத் திரும்பி வந்து பல ஒற்றர்களைப் பீஜபூர், ஒரிஸா நாடுகளுக்கனுப்பி அந்நாடுகளின் நிலைமையை அறிந்து

வர ஏற்பாடு செய்தார். ஒற்றர்கள் திரும்பி வந்து பீஜபூர், அகமத்நகர், கோல்கொண்டா நாட்டுச் சுல்தான்களும், ஒரிஸா நாட்டுக் கஜபதி மன்னனும் ஒன்றுகூடி விஜயநகரைத் தாக்க முனைப்பு செய்து வருவதாகச் செய்தி தந்தனர். இது தெரிந்ததும் சாளுவ திம்மன் விஜயநகர சேனையைப் பெருக்கி முறையாகப் பயிற்சி அளித்து எக்கணத்திலும் போருக்குத் தயாராக இருக்குமாறு செய்து விட்டார்.

உண்மையில் கிருஷ்ணராயனுடைய போர் வெற்றிகளுக்கும், அறிவுத்திறனுக்கும் திறமை கொண்ட அரசாட்சிக்கும் சாளுவ திம்மனே முதற் காரணமாவார். அவர் அரசனுடைய தந்தையாகவும் அமைச்சராகவும், நண்பராகவும், ஆசிரியராகவும் இருந்து பணியாற்றினர். அவருடைய உதவியின்றி விஜயநகரப் பேரரசு சரித்திரத்தில் ஒரு சிறந்த இடம் பெற்றிருக்காது என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களின் முடிவு. பேய்ஸ் என்னும் ஆசிரியர் 'சாளுவ திம்மன் தான் விஜயநகரப் பேரரசில் அதிகாரஞ் செலுத்தி வந்தார். அரசனுக்கு அடிபணிவது போலவே எல்லாப் பிரபுக்களும் அவருக்கு அடிபணிந்து அவர் கட்டளையை நிறைவேற்றக் காத்திருந்தனர்' என்று கூறுகிறர். சேலம் மாவட்டத்திலுள்ள பருத்திப் பல்லி என்னும் சிற்றூரிலுள்ள ஒரு கல்வெட்டால் 'தர்மராய மகாராயருக்குப் பிரதிநிதியாக நரசநாயக உடையார் இருந்தார். அரசருக்குப் பதிலாக அவரே அரசு புரிந்து வந்தார்' என்று அறியக்கிடக்கிறது. மேலும் சாளுவ திம்மன் 'தர்ம பிரதி பாலகர்' என்ற பட்டத்தோடு தலைநகரத்தின் பிரதம நீதிபதியாக இருந்து நீதி வழங்கி வந்தார் என்பதும் தெரிய வருகிறது. நிருவாகம், போர்முறை இவற்றைத் தவிர

இலக்கியத்திலும் இவருக்குத் திறமை இருந்தது. அகத்தியருடைய 'பால பாரத'த்திற்கு 'பால பாரத வியாக்கியம்' என்ற அரியதோர் உரையை இவர் வகுத்துள்ளார்.

கிருஷ்ணதேவராயனுடைய போர்த் திறனையும் கூரிய மதியையும் படை வலிமையையும் அறிந்து போற்ற, அவர் காலத்திலிருந்த அரசியல் சூழ் நிலையை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பத்தாண்டுகட்குள் இரண்டு அரச வமிசங்கள் வலுப்பெற்று, வாழ்ந்து, அழிந்தன. இப்புரட்சிகளால் நாட்டில் கலகமும் குழப்பமும் நிறைந்திருந்தன. விஜயநகரப் பேரரசிலிருந்த திறை மன்னர்களும் சேனைத் தலைவர்களும் இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சுதந்திர மன்னர்களெனத் தம்மை அறிவித்துக்கொண்டனர். பேரரசு வலியிழந்தது. மாகாணங்கள் தனியதிகாரம் பெற்றுவிட்டன. இத்தகைய உள்நாட்டு நிலையை உணர்ந்த விஜயநகரத்தின் பகை மன்னர்கள் அடிக்கடி இந்நாட்டின் மீது படையெடுக்கலாயினர். தக்காணத்துச் சுல்தான்களும், ஒரிஸா நாட்டு கஜபதி அரசனும் பன்முறை படையெடுத்து வந்து நாட்டில் கொள்ளையடித்துச் சென்றார்கள். இவர்களை எதிர்த்துப் போராட நாட்டில் ஒரு பலத்த அரசு இல்லை. மாகாணங்களிடையே ஒற்றுமை இல்லை. இந்நிலையில்தான் கிருஷ்ணராயன் அரசேற்றார். அவரைக் கண்டஞ்சிய பகைவர்கள் உடனே ஒன்று கூடித் தமக்குள் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு ஒருமுகமாக விஜய நகரத்தை எதிர்க்க முன் வந்தார்கள்.

இந்நிலை ஒரு புறமிருக்கத் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் போர்த்துகீசியர் வந்து சேர

லாயினர். கி. பி. 1498-இல் வந்திறங்கிய இவர்கள், நாட்டு மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தங்கள் செல்வாக்கையும் வாணிகத்தையும் பரப்பினர் கள் ; விரைவில் கொச்-சி, கொல்லம் போன்ற மேற்குக் கரைத் துறைமுகங்களில் ஆலைத் தொழில்களைத் துவக்கி நடத்தவும் முற்பட்டார்கள். ஆனால் போர்த்து கீசியருக்கும் விஜயநகரத்து அரசர்களுக்கும் இடையே நட்பு நிலவி வந்தது. இதற்கு முதற்காரணம், இவர் களுக்கு பீஜப்பூர் சுல்தான் என்ற ஒரு பொது எதிரி இருந்ததாகும். இரண்டாவதாக, போர்த்துகீசிய வாணிகர்களுக்கு இந்து அரசர்களிடமிருந்து சில வர்த்தகச் சலுகைகள் வேண்டியிருந்தன. அவர் களுடன் நடபுக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்து இச்சலுகைகளைப் பெற்றால்தான் தங்கள் வர்த்தகம் மேலோங்கும் என்பதைப் போர்த்து கீசியர் நன்கு உணர்ந்திருந்தனர். அப்பொழுது கோவா என்ற இடத்தில் இருந்துவந்த அல்புகர்க் என்ற போர்த்துகீசிய ஆணையாளர் லூயி என்ற ஒரு பாதிரியாரையும் வட்டார மொழிகளறிந்த காஸ்பர் என்ற ஒருவரையும் விஜயநகர அரசரிடம் நல்லெண் ணத் தூதர்களாக அனுப்பினர். மேலும் அவர்களின் மூலம் ஆல்புகர்க் சில நல்ல குதிரைகளை கிருஷ்ண ராயனுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்.

இத்தகைய சூழ்நிலையில் அரசேற்றும் கிருஷ்ண ராயன் விரைவில் தனக்கிருந்த எதிர்ப்பையும் இன்னல் களையும் தீர்த்துக் கொண்டார். முதலில் புரட்சி செய்த மாகாணத் தலைவர்களையும், படைவீரர்களையும், திறை மன்னர்களையும் முறியடித்துத் தம் அடிபணியச் செய்தார். பிறகு ஒரிஸா மன்னனை எதிர்த்துச் சென்று அவனைப் படுதோல்வி அடையச் செய்துத்

தமக்குத் திறை செலுத்தும் ஒரு சாதாரண பிரபுவாக்கினார். மூன்றாவதாக, போர்த்துக்கீசியர் உதவியைக் கொண்டு பீஜப்பூர் சுல்தானுடன் ஒரு விடாப் போரை நடத்தி ரெய்ச்சூர் என்னுமிடத்தில் அவனை வெற்றி கொண்டார். மறுபடியும் தலை எடுக்கவொட்டாமல் சுல்தானை முறியடித்துத் தம் வலிமையை நிலை நாட்டினார்.

4. உம்மத்தூர் படையெடுப்பு

கிருஷ்ணராயருடைய படையெடுப்புக்களில் முதலாவது உம்மத்தூர் அரசனை கங்கராஜனை வெல்லச் சென்றதாகும். உம்மத்தூர் என்பது மைசூர் மாவட்டத்திலுள்ளது. கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள கொள்ளேகாலத்திற்கு வடகிழக்கே ஏறக்குறைய ஒன்பது கல் தூரத்திலுள்ள காவிரியின் நீர்வீழ்ச்சியால் சிவன சமுத்திரம் என்ற தீவு ஏற்பட்டுள்ளது. இத்தீவிலுள்ள கோட்டைதான் உம்மத்தூரின் முதன்மையான கோட்டையாகும். துளுவர்கள் அரசு பெற்றபோது உம்மத்தூர் அரசில் மைசூரிலுள்ள தெற்காநம்பி என்ற மாவட்டமும், தற்காலத்துக் கோயமுத்தூரின் பெரும் பகுதியும் அடங்கியிருந்தன.

உம்மத்தூரின் சிற்றரசர்கள் முதலில் விஜயநகர அரசர்களுக்குத் திறை செலுத்தி வந்தார்கள். ஆனால் கி. பி. 1491-இல் ஏற்பட்ட ஒரு கல்வெட்டில் இம்மடிராய உடையார் மகன் நஞ்சராய உடையார் என்பவருடைய பெயர் அரசனுக்குரிய பட்டங்களுடன் காணப்படுகிறது. இதனால் 1491 இல் உம்மத்தூரை ஆண்டு வந்தவர்கள் விஜயநகர அரசர்களுடைய தலைமையை உதறித் தள்ளிவிட்டுத் தனியதிகாரம் பெற்றது தெளிவாகிறது. மற்றும், கி. பி. 1499-1500-இல் எழுந்த கல்வெட்டொன்றில் “மஹா மண்டலேஸ்வர வீர-நஞ்சராய உடையார் தம்அரசைத் தனிஅரசாக்கிக் கொண்டு சுதந்திரமாக ஆட்சி செய்து வரலானர்” என்ற செய்தி காணக்கிடக்கிறது. இவற்றால் விஜயநகர அரசில் இருந்த உள்நாட்டுக் கலகம், அரச வமிச மாறுதல் ஆகியவற்றால் சிறிது தைரியம் பெற்று உம்மத்தூர் சிற்றரசர்கள் சுதந்திர அரசர்களெனத்

தம்மைப் பறைசாற்றிக் கொண்டனர் என்பது புல ஞகிறது.

ஆனால் 1511-இல் உம்மத்தூர் அரசரான வீர சிக்கராய உடையார் என்பவர் கலகஞ் செய்து பெனு கொண்டா நகரம் தம்மை சேர்ந்தது என்று கூறி அந் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். போர்த்துகீசிய அரசாங்கத்தார் லூயி என்ற பாதிரியாரை விஜயநகர சபைக்கு அனுப்பியிருந்தார்களென்று முன்னரே கூறப்பட்டது. அப்பாதிரியார் 1510 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கோவாவில் இருந்த போர்த்துகீசிய ஆணையாளரான அல்புகர்க் என்பாருக்கு உம்மத்தூர் பற்றிய செய்தியை ஒரு கடிதத்தில் எழுதி அனுப்பி யிருக்கிறார். அக்கடிதத்தின் ஒரு பகுதி பின் வருமாறு:—

"விஜயநகரத் திறை மன்னர்களில் ஒருவன் பேரரசுக்கு எதிராகப் புரட்சிசெய்து, பெர்குண்டா நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அரசு தனக்குரியது என்று அவன் மன்றாடு கிறான். ஆகவே கிருஷ்ணராயர் 5,000 காலாட்களையும் 2,000 குதிரை வீரர்களையும் கொண்ட ஒரு சேனையை எழுப்பி யிருக்கிறார். உம்மத்தூர் அரசன் வசமுள்ள (கடற்கரைக் கருகிலுள்ள) அந்நகரத்தைத் தன் முழு பலத்துடன் எதிர்க்கக் கிருஷ்ணராயர் புறப்படப் போகிறார்."

பெனுகொண்டா முற்றுகையிடப்பட்டது என்ற செய்தியைக் கேட்டதும் கிருஷ்ணராயர் தன் சேனை யை சங்குல நாயகன் என்பவர் தலைமையில் போருக்கு அனுப்பினர். சென்ற படைகள் உம்மத்தூரின் தலை நகரான சிவன சமுத்திரத்தைக் கைப்பற்றிக்கொண்டு ஸ்ரீரங்கப்பட்டினத்தையும் தம் வசமாக்கிக் கொண் டன. முடிவில் உம்மத்தூர் அரசர் தோல்வி யடைந்தார். அவருடைய அரசு விஜயநகரப் பேரரசில் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்ளப்

பட்டது. பின்னர் அப்பகுதியிலிருந்த பாளையப் பட்டுக்களை கைப்பற்றி, அங்குச் சங்குல நாயகன் தன் ஆட்களை நியமித்தார். இன்னும் 'கிருஷ்ணராய விஜயம்' என்ற நூலில் வெற்றிபெற்ற சங்குல நாயகன் தன் பெயரில் நாணயங்களை அச்சிட்டு உம்மத்தூரில் வழங்கினர் என்ற செய்தி காணக் கிடக்கிறது. கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள ஈரோடில் ஒரு கல்வெட்டு உள்ளது. அதனின்று கிருஷ்ணராயர் புதிதாகக் கிடைத்த பகுதிகளை ஒன்று சேர்த்து, அவற்றை ஒரு தனி மாகாணமாக்கி அதற்கு பர்வத-ராவுத்தர் என்பவரை ஆணையாளராக நியமித்தார் என்ற செய்தி தெரியவருகிறது.

5. ஒரிஸா படையெடுப்பு

உம்மத்தூரை அடக்கித் தன் அரசில் இணைத்ததும் கிருஷ்ணராயன் ஒரிஸா அரசனுடன் ஒருபெரும் போர் தொடுத்தார். நெடுநாளாக ஒரிஸா நாட்டுக் கஜபதி அரசர்கள் விஜயநகரத்தின் பகைவர்களாயிருந்து, வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் நாட்டில் நுழைந்து, நிலங்களையும், கிராமங்களையும் கைப்பற்றிக் கொண்டு இன்னல் இழைத்து வந்தனர். இதுபோலவே விஜயநகர மன்னர்களும் அவ்வப்பொழுது ஒரிஸா நாட்டில் புகுந்து கொள்ளையடித்து வந்தனர். இவர்களுக்கிடையே நல்லுறவு நிலைத்திருந்ததே கிடையாது. முதல் வமிசத்துக் கடைசி அரசர்களுள் ஒருவரான **மல்லிகார்ஜுனன்** விஜயநகரில் ஆண்டபோது கஜபதி அரசனும் குல்பர்க்கா சுல்தானும் சேர்ந்து விஜயநகரில் புகுந்து கொள்ளையிட்டார்கள். மல்லிகார்ஜுனனுக்குப் பிறகு வந்த அரசர்கள் காலத்தில் ஒரிஸா நாட்டு அரசனை புருஷோத்தம தேவன் விஜயநகரில் புகுந்து அதன் கீழ்க்கரையிலிருந்த உதயகிரி, கொண்டவிடு ஆகிய பல இடங்களைக் கைப்பற்றிக்கொண்டு காஞ்சீபுரம் நோக்கிச் சென்றார் என்ற வரலாறு நெல்லூர் கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கிறது.

கி. பி. 1510-இல் பிரதாபருத்ர கஜபதி பீஜபூர், கோல்கொண்டா, ஆமத்நகர் சுல்தான்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கிருஷ்ணராயருடன் போரிட ஆயத்தம் செய்துகொண்டார். இச்செய்தியை ஒற்றர்கள் மூலம் அறிந்த கிருஷ்ணராயர் சேனைகளைத் திரட்டினார்; 34,000 காலாட்களும், 800 யானைகளும் மற்றக் கூறுகளும் கொண்ட ஒரு பலத்த சேனையைத் திரட்டினார். இச்சேனையுடன் கிருஷ்ணராயர்

நெல்லூர் மாவட்டத்திலுள்ள உதயகிரிக்குச் சென்று அக்கோட்டையை முற்றுகையிட்டார். உதயகிரி பழங்காலந்தொட்டு விஜயநகர அரசர்கள் வசமிருந்தது. பிட்ரகுண்டா என்ற இடத்தில் காணப்படும் மானியப்பட்டயத்தில் (1356–57) **முதலாம் கம்பன்** என்பவன் உதயகிரியின் முதலரசன் என்றும், அவனுக்குப்பின் அவனுடைய மகன் **இரண்டாம் சங்கமன்** பட்டத்திற்கு வந்தான் என்றும் கூறப் படுகிறது. விஜயநகரத்து முதலாம் புக்கன் அரசனு யிருந்தபோது, அவனுடைய மகன் பாஸ்கரன் உதயகிரி மாகாணத்தில் நிர்வாகம் நடத்தி வந்தார். முதலாம் தேவராயன் உதயகிரியின் அரசனுயிருந்து (1393–94) மானியம் அளித்ததற்குச் சான்ருகக் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. பிறகு அவன் விஜய நகர அரசனானபோது உதயகிரியை அவனுடைய மகனுன இளவரசன் **இராமச்சந்திரன்** என்பவர் ஆண்டுவந்தார். இதனுல் உதயகிரியை எப்பொழுதும் அரச வமிசத்தினரே-குறிப்பாக இளவரசர்களே-ஆண்டு வந்தார்களென்பதும், விஜயநகரத்தில் உதய கிரி தனிப் பெருமையும் முக்கியத்துவமும் பெற்றிருந்தது என்பதும் தெளிவாகிறது.

ஆனுல் சங்கம வமிசம் மறைந்து போனதும் உதயகிரி ஒரிஸா நாட்டரசர்களால் கவரப்பட்டது. உதயகிரிக் கோட்டை இயற்கையிலேயே ஒரு முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. "கீழ்க் கரையிலுள்ள இராணுவத்தலங்களில் உதயகிரி மிகச் சிறப்பு வாய்ந்தது. அழிந்துபோன நிலையிலும் அக்கோட்டை அற்புதமான சிற்பக்கலைக்கும் போரியற் கலைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதற் குள் பகைவர் நுழைவது இயலாத காரியம். உட்

செல்லும் வழிகளும், மதிற்கதவுகளும் மிக்க சாதுரியமாக அமைக்கப்பட்டுள்ளன" என்று உதயகிரியை நேரிற் கண்ட அலெக்ஸாந்தர் ரீ என்பவர் கூறுகிறார். பிரதாபருத்திரன் அரசு பெற்றதும் 10,000 காலாட்களையும், 400 குதிரைகளையும் புதிதாகத் திரட்டி உதயகிரியின் காவற் சேனையைப் பலப்படுத்தினர். அங்குத் தன் மாமனை திருமலை ராகவராயரை நிருவாகம் நடத்த அமர்த்தினர்.



Copyright : Department of Archaeology

உதயகிரியின் வடபகுதியிலுள்ள கோட்டை

கிருஷ்ணராயர் ஒரிஸா நாட்டு மன்னனை எதிர்க்கும் வகையில் முதன் முதலாக உதயகிரியை முற்றுகையிட்டார் என்று முன்னர் கூறப்பட்டது. பலம் மிக்க கோட்டையாதலால் முற்றுகை ஏறத்தாழ 18 மாதங்களுக்கு நீடித்தது. கிருஷ்ணராயர் மலைகள்

வழியாகப் பல பாதைகளை உண்டாக்கி அவற்றின் வழியாகச் சென்று, ஏணிகள் முதலியவற்றின் துணை கொண்டு கோட்டைக்குள் புகுந்துவிட்டார். உடனே ஆயிரக்கணக்கான படைவீரர்கள் உட்புகுந்தனர்; உள்ளே இருந்த எதிரிகளைக் கொன்று வீழ்த்தி, திருமலைராகவனைக் கைது செய்தனர். உதயகிரிக் கோட்டை கிருஷ்ணராயர் வசமாயிற்று. உதயகிரிக் கோட்டையிலுள்ள ஒரு பெரும்பாறையில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுக்களால் அக்கோட்டை 1514 ஆம் ஆண்டு ஜூன்மாதம் 9 ஆம் நாளன்று கிருஷ்ண ராயர் வசமாயிற்று என்பதும், ஒரிஸா மன்னரின் மாமனை திருமலைகண்டனும், அவன் மனைவியும் கைது செய்யப்பட்டனர் என்பதும், ஆனால் அவர்கள் தகுந்த மரியாதைகளுடன் நடத்தப்பட்டனர் என்ப தும் அறியக்கிடக்கிறது.

உதயகிரி தன் வசமானதும், கிருஷ்ணராயர் வடக்கு நோக்கிச் சென்று கொண்டவிடு கோட் டையை முற்றுகையிட்டார்; அவ்விடத்திற்குச் செல் லும் வழியில் அத்தாங்கி, வினிகொண்டா, பெல்லம் கொண்டா, நாகராஜூனி துர்க்கா, தங்கேடா, கேதா வரம் ஆகிய மலைக்கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டார். கொண்டவிடு என்பது குண்டூர் மாவட் டத்திலுள்ள ஒரு மலைக்கோட்டையாகும். 14ஆம் நூற்றுண்டின் இடையில் காகதீயர்கள் அழிவுற்றனர். பின்னர் ரெட்டிகுலத்தார் தென்னிந்தியாவில் செல் வாக்கும் பலமும் பெற்று விளங்கத் தொடங்கினர். கொண்டவிடு அவர்களுடைய தலைநகராயிருந்தது. கி. பி. 1436-இல் விஜயநகர மன்னரான இரண்டாம் தேவராயர் ரெட்டிமக்கள் வசமிருந்த நிலப்பகுதிகளை யெல்லாம் கைப்பற்றித் தன் நாட்டில் சேர்த்துச்

கொண்டார். அவ்வரசர் இறந்தபின் வந்த விஜயநகர மன்னர்கள் வலியற்றவர்களாயிருந்ததைக் கண்டு, ஒரிஸாநாட்டு அரசர் கொண்டவிடு கோட்டையைத் தன் வசமாக்கிக் கொண்டார். 1453-54-இல் ஒரிஸா நாட்டரசனின் திறை மன்னனுன கனதேவன் என்பான் கொண்டவிடு கோட்டையில் இருந்துகொண்டு, அம்மாகாணத்தை ஆட்சி புரிந்து வந்தார். அது முதல் கஜபதியர்கள் வசமே இருந்துவந்த கொண்டவிடு கோட்டை முடிவாகக் கிருஷ்ணராயர் காலத்தில் அவருடைய அரசில் சேர்ந்தது. மங்களகிரியிலுள்ள சில கல்வெட்டுக்கள் இதுபற்றிய செய்திகளைப் பரக்கக் கூறுகின்றன.

கிருஷ்ணராயர் கொண்டவிடு கோட்டையை முற்றுகையிட்டதும், பிரதாபருத்திரன் 1300 யானைகளும், 20,000 குதிரைகளும், 500,000 காலாட்களும் நிறைந்த தன் படையைத் தெற்கே அனுப்பி, கிருஷ்ண நதியின் வடகரையில் இருக்கச்செய்தார். கிருஷ்ணராயரின் படைகளை எதிர்பார்த்த வண்ணம் காத்திருந்தன ஒரிஸாப் படைகள். கிருஷ்ணராயர் தன் படையின் ஒரு பங்கைக் கொண்டவிடு முற்றுகைக்கு நிறுத்திவிட்டு, மீதிப்படையோடு கிருஷ்ண நதியைக் கடந்து சென்று, பிரதாபருத்திரனைச் சந்தித்தார். ஒரு கடும்போர் நிகழ்ந்தது. ஒரிஸா மன்னர் படுதோல்வி அடைந்தார். அவருடைய படைகளிடமிருந்த பொருள்களையும் ஆயுதங்களையும் பறித்துக்கொண்டு விஜயநகரப் படை திரும்பியது. கிருஷ்ணராயர் தம் முழு ஆற்றலுடன் கொண்டவிடு கோட்டையை முற்றுகையிட்டு எதிர்த்து நின்று, இறுதியாக அதைக் கைப்பற்றினர். திருவண்ணமலைக் கல்வெட்டுக்களில் இதுபற்றிய பின்வரும் செய்தி காணப்படுகிறது :—

"கொண்டவிடு தன் வசமானதும் கிருஷ்ணராயர் சில திறைமன்னர்களையும் வீரர்களையும் கைதுசெய்து, பின்னர் அவர்களை மன்னித்து விட்டார். கைது செய்யப்பட்டவர்கள் வீரபத்ரராயன், நரஹறி தேவன், மல்லுகான், உத்தண்டாகான் முதலியோராவர்."

கிருஷ்ணு மாவட்டத்திலுள்ள அமராவதி என்னுமிடத்திலுள்ள அமரேஸ்வரர் ஆலயத்தில் ஒரு துறவியின் அறை உள்ளது. அதிலுள்ள கல்வெட்டு ஒன்றில் ஒன்று நீண்ட தெலுங்குக் கவிதை காணப்படுகிறது. அதில் "தீவிரமாக எதிர்த்துப் போராடி சிவனசமுத்திரம், உதயகிரி, வினிகொண்டா, பெல்லம் கொண்டா ஆகியவற்றைக் கைப்பற்றிப் பின்னர் கஜபதி அரசனின் புதல்வனை வீரபத்திரனைப் போர்க்களத்தில் உயிருடன் கைது செய்து, கொண்டவிடு கோட்டையைக் கைப்பற்றிய பெருவீரரான கிருஷ்ணராயர்" என்று கூறப்பட்டுள்ளது.

கொண்டவிடு முற்றுகையில் கிருஷ்ணராயர் வெற்றிபெற்றது கி. பி. 1515ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் நாளில் என்று துணிவாகக் கூறப்படுகிறது. மங்களகிரி, காஸா, கொண்டவிடு ஆகிய இடங்களிலுள்ள சில கல்வெட்டுக்களில் இவ்வெற்றிற்குச் சாளுவதிம்மன்தான் காரணமென்று கூறப்பட்டுள்ளது. விஜயநகரப் படைகளுக்குத் தலைமை வகித்துத் திறம்படப் போரிட்ட காரணத்தால் இவ்வெற்றி திம்மனுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதப்பட்டது. கிருஷ்ணு மாவட்டத்தில் குண்டூருக்கு வடகிழக்கே 12 கல் தொலைவிலுள்ள மங்களகிரி என்னுமிடத்தில் மலையுச்சியில் ஓர் அழகிய ஆலயம் உள்ளது. அதிலுள்ள கல்தூண் ஒன்றில் ஒரு நீண்ட வடமொழிக் கவிதை பொரிக்கப்பட்டுள்ளது. அது சாளுவ திம்ம

னுடைய பெருமையை விரிவாகக் கூறுகிறது. "கஜபதியால் கொண்டவிடு கோட்டைக்கு நியமிக்கப்பட்டிருந்த அரசர்களைக் கைது செய்து திம்மன் வெற்றியடைந்தான்" என்று அதில் கண்டுள்ளது. இதனால் அக்காலத்தில் கொண்டவிடுப் பகுதியில் கஜபதி அரசனுக்குக் கீழ்ப்பட்ட சில தலைவர்கள் ஆண்டு வந்தனர் என்பது புலனாகிறது. அக்கோட்டை கைப்பற்றப் பட்ட நாளும் அப்பாட்டில் பன்முறை குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ்வெற்றியைக் கிருஷ்ணராயர் மிக்க விமரிசையாகக் கொண்டாடினார். தரணிக்கோட்டை என்ற இடத்திலுள்ள அமரேசுவரர் ஆலயத்தில் இருந்து கொண்டு கிருஷ்ணராயர் தங்க நாணயங்களை வாரி மக்களுக்கு வழங்கினார். கொண்டவிடு பகுதியைத் தன் மந்திரியான சாளுவ திம்மனிடம் ஒப்படைத்து விட்டுப் பிரதாபருத்திரனைப் பிடித்துவர ஒரிஸாவுக்குச் சென்றார். ஆனால்' சாளுவதிம்மனும் அவருடன் சென்றார்.

ஒரிஸாவுக்குச் செல்லும் வழியில் கிருஷ்ணராயர் பல முக்கிய இடங்களைக் கொள்ளையிட்டு ஏராளமான பொருளைச் சேகரித்தார்; கொண்டபல்லி என்ற இடத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார்; பிரதாப ருத்திரனின் மனைவியையும் மகனையும் கைது செய்தார். கொண்டபல்லியிலிருந்து நேரே ஒரிஸாவுக்குச் சென்று கிருஷ்ணராயர் போத்தனூர்—சிம்மாத்ரி என்ற இடத்தில் தம் சேனைகளுடன் பிரதாபருத்திரனின் வரவை எதிர்நோக்கித் தங்கியிருந்தார். ஆனால் அவன் வெளிவந்து கிருஷ்ணராயனைச் சந்திக்கவேயில்லை. அதன் பின்னர், அந்நாட்டைத் தன் வசமாக்கிக்கொண்டு கிருஷ்ணராயர் சிம்மாத்திரியில் தம்

வெற்றியின் சின்னமாக ஒரு பெரிய தூணை நாட்டினுர். ஒரிஸா மன்னரும் அவருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி, ஒரிஸா மன்னர் விஜயநகர மன்னர்களுடைய திறைமன்னனுக இருக்கவும், கிருஷ்ணுநதிக்கு வடக்கிலிருந்த அவருடைய நாட்டுப் பகுதிகள் அவனுக்கே திருப்பிக் கொடுக்கப்படவும் ஏற்பாடாயிற்று. மேலும், போரில் கைது செய்யப்பட்ட போர்வீரர்கள் விடுதலை பெற்றனர். பிரதாபருத்திரனின் புதல்வனுன வீரபத்திரனுக்கு மைசூரின் மேற்கேயுள்ள மலய்பென்னூர் பகுதி முழுவதும் அளிக்கப்பட்டது. வெற்றி கொண்ட அரசர் பிரதாபனுடைய மகளை மணந்துகொண்டார். பின்னர், அவர் 1515 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் நாளன்று சிம்மாசலத்திலுள்ள பெரிய கோவிலுக்குப் பல மானியங்கள் அளித்தார். இச்செய்தி அக்கோயிலில் உள்ள இருகல்வெட்டுக்களால் அறியக்கிடக்கிறது. மேலும் விலையுயர்ந்த ஆபரணங்களையும் அக்கோயிலுக்குத் தந்து அரசர் மகிழ்ந்தார்.

இதற்குப் பின்னர் கிருஷ்ணராயர் புது நாடுகளைக் கைப்பற்றித் தம் பேரரசைப் பெருக்கும் கருத்தோடு தென்னுட்டில் புகுந்தார். காஞ்சீபுரம், செஞ்சி, வேலூர் ஆகிய இடங்களிலிருந்த கோட்டைகளைக் கைப்பற்றினுர் ; வேலூர்க் கோட்டையைப் பலப்படுத்திச் சில வீரர்களையும் இளவரசர்களையும் அங்கு நியமித்துவிட்டுத் தெற்கே மதுரையை நோக்கிச் சென்ருர். மதுரையைக் கைப்பற்றிய கிருஷ்ணராயர் அதை நாகமநாயகரிடம் ஒப்படைத்தார். இந்நாயகருக்குப்பின் இவருடைய புதல்வரான விசுவநாத நாயகர் மதுரையாட்சியை மேற்கொண்டார். மதுரையில் ஆண்ட நாயக வமிசத்தைத் தோற்றுவித்தவர் இவரே.

புகழ்பெற்ற திருமலைநாயகரும் இராணி மங்கம்மாளும் இவ்வமிசத்தைச் சேர்ந்தவர்களே.

கிருஷ்ணராயர் தென்னிந்தியாவிலுள்ள பெரிய கோயில்களைக் கண்டு மகிழ்ந்து, அவற்றிற்குப் பல மானியங்களும், பெரும் பொருளும் அளித்தார்; திருப்பதி கோயிலுக்குச் சென்று தரிசித்தார்; அவ்வாலயத்தின் திவ்விய விமானத்தைத் ,தங்கத்தகட்டால் வேய ஏற்பாடு செய்தார். பல ஆபரணங்களும் நிலங்களும் அக்கோயிலுக்கு வழங்கப்பட்டன. கிருஷ்ணராயர் திருக்காளத்திக்குச் சென்று ஒரு நூறுகால் மண்டபத்தையும் பெரிய கோபுரத்தையும் அங்குக் கட்டுவித்தார். இதற்குத் திருவண்ணுமலைக் கல்வெட்டுக்கள் தக்கச் சான்று தருகின்றன. பின்னர் கிருஷ்ணராயர் கும்பகோணத்திற்குச் சென்று அங்கு நடந்த மகாமகத் திருவிழாவைக் கண்டு களித்தாரென்றும் தெரிகிறது.

கி. பி. 1517 முதல் 1520 வரை அவருடைய வாழ்க்கையில் முக்கியமான சம்பவம் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. இம்மூன்று ஆண்டுகளையும் அவர் இலக்கிய, சமயத்துறைகளில் ஈடுபட்டுக் கழித்திருப்பார் போலும்!

6. பீஜபூர் படையெடுப்பு

கிருஷ்ணு, துங்கபத்திரா நதிகளுக்கிடையே இருந்த ரெய்ச்சூர், மிக முக்கியமான பகுதியாக விளங்கிற்று. இதில்தான் ரெய்ச்சூர், முட்கல் ஆகிய இரு கோட்டைகளும் அடங்கியிருந்தன. இப்பகுதி தங்களுக்குரியது என்று விஜயநகர மன்னர்களும் பாமினி சுல்தான்களும் உரிமை கொண்டாடினர். இதன் விளைவாக 1366-இல் ஏற்பட்ட பகைமை நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. இரண்டாம் தேவ ராயர் தக்காணத்து முகமதியப் படைகளுடன் போரிட்டு அவற்றைப் படுதோல்வி அடையச் செய்தார். அவருக்குப் பின் வந்த மன்னர்கள் திறமையற்றவர்களாய் இருந்தனர். ஆகவே இந்துக்களுக்கு எங்கும் தோல்வியே ஏற்பட்டு வந்தது. குல்பர்க்கா சுல்தான் விஜயநகரத்தின் மீது படையெடுத்து வந்து ரெய்ச்சூர், முட்கல் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டு ரெய்ச்சூர் பகுதியில் தம் ஆட்சியை ஏற்படுத்தினர்.

சிறிது காலத்திற்குப் பின் பாமினி அரசில் பல மாறுதல்கள் ஏற்பட்டு முடிவில் அது பீஜபூர், கோல்கொண்டா, அகமத்நகர், பீரார், பீடார் என்ற ஐந்து தனி அரசுகளாகப் பிரிந்தது. இவற்றுள், பீஜபூர் வலிமை மிக்கது. ஆகவே, ரெய்ச்சூர் பகுதி முழுவதும் பீஜபூர் அரசரான ஆதில்ஷாவின் வசம் வந்தது. கிருஷ்ணராயர் பட்டத்துக்கு வந்ததும் கோல்கொண்டா, அகமத்நகர், ஒரிஸா மன்னர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, பீஜபூர் சுல்தான் கிருஷ்ண ராயனைத் தோற்கடிக்க ஏற்பாடுகள் செய்தார். மேலும் ஒரிஸாமீது கிருஷ்ணராயர் படை

யெடுத்துச் சென்றபோது படை, பணம் ஆவன தந்து, தம் நண்பனுக்கு பீஜபூர் சுல்தான் உதவி புரிந்தார்.

பீஜபூர் சுல்தானை முறியடித்து, அவருடைய நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற அவா கிருஷ்ண ராயருக்குத் தொடக்கத்திலிருந்தே இருந்தது. 1514 ஆம் ஆண்டிலேயே இதன் பொருட்டுக் கிருஷ்ணராயர் அல்புகர்க்கின் உதவி பெறத் தம் தூதுவரை அனுப்பி யிருந்தார். ஆனால் ஒரிஸா மன்னனை வென்றபின், பீஜபூர்மீது படையெடுத்துச் செல்வதென்று அவர் முடிவு செய்திருந்தார். ஆகவே, ஒரிஸாமீது வெற்றி கொண்டவுடன் பீஜபூர்மீது கிருஷ்ணராயர் தம் முழு கவனத்தையும் செலுத்தலானார். ஆனால் அப்பொழுது பீஜபூர், விஜயநகர் ஆகியவற்றிடையே நல்லுறவு நிலவி வந்தது. ஆகவே போர் தொடங்க ஒரு நல்ல காரணம் கிடைக்க வேண்டுமென்று கிருஷ்ண ராயர் காத்திருந்தார். சையத் மர்கார் என்ற ஒரு முகமதிய னிடம் பொருள் கொடுத்துத் தனக்குக் குதிரைகள் வாங்கிவரும் பொருட்டுக் கிருஷ்ணராயர் அவனைக் கோவாவுக்கு அனுப்பினார். பொருளோடு சென்ற மர்கார் பீஜபூர் சுல்தானிடம் சரணடைந்தார். இதை யறிந்த கிருஷ்ண ராயர் உடனே சையத் மர்காரை நாடு கடத்துமாறு சுல்தானுக்கு நிருபம் எழுதினார். இதைச் சுல்தான் பொருட்படுத்தாமலிருக்கவே, தங் களுக்குள் ஏற்பட்டிருந்த உடன்படிக்கைக்கு அது முரணானது என்ற காரணங் காட்டி, கிருஷ்ணராயர் பீஜபூர்மீது படையெடுத்துச் சென்றார்.

காலாட்களும், குதிரைகளும், யானைகளும் கொண்ட பெருஞ் சேனையுடன் ராயர் ரெய்ச்சூரை நோக்கிப் புறப்பட்டார். ரெய்ச்சூருக்கு அருகிலுள்ள

மலியாபாத் என்ற இடத்தில் இச்சேனை தங்கியது. கிருஷ்ண ராயருடைய திறை மன்னர்களும் மாவட்ட அதிபர்களும் தத்தம் வசமிருந்த சேனைகளை மலியா பாத்துக்கு அனுப்பி வைத்தனர். எல்லாச் சேனை களையும் ஒன்று சேர்த்து ஒழுங்குபடுத்தியபின் கிருஷ்ணராயர் அவற்றோடு ரெய்ச்சூரின்மீது படை யெடுத்துச் சென்று, அங்கிருந்த கோட்டையை முற்றுகையிட்டார். ரெய்ச்சூர் கோட்டை மிக்க பல மானது; எளிதில் உட்செல்ல இயலாதது; பலத்த உயர்ந்த பல மதிற் சுவர்களையும், இயற்கையான அகழிகளையும் கொண்டது. காலாட்களும், குதிரை களும், யானைகளும், பீரங்கிகளும், துப்பாக்கிப் படைக் கூறுகளும் அக்கோட்டையைக் காவல் புரிந்து வந்தன. விஜயநகர சேனைகள் கோட்டை மதிலை நெருங்கியதும் முகமதிய படைகள் அவற்றைப் பொசுக்கிவிட முயன்றன. அதனால் காமநாயகன் என்ற தலைவனின் கீழிருந்த படை மிகவும் சேத மடைந்தது. கோட்டையின் கீழ்ப்புறத்தில் கடும்போர் நடந்தது.

இதற்குள் ஆதில்ஷா தன் சேனையின் ஒரு பகுதி யுடன் வந்து ரெய்ச்சூருக்கு 9 கல் தொலைவில் கிருஷ்ணா நதிக் கரையில் தங்கினார். அங்கிருந்து கொண்டு விஜயநகரப் படைகளைத் தாக்க வேண்டும் என்பது அவருடைய திட்டம். இதை ஒற்றர்கள் மூலம் அறிந்த கிருஷ்ண ராயர் தம் சேனையின் ஒரு பகுதியைத் தம் மாமனான குமார வீரய்யன் என்பவர் தலைமையில் அனுப்பி, ஆதில்ஷாவை எதிர்க்க ஏற்பாடு செய்தார். ஆனால் ஷாவின் படைகள் இந்து சேனையைச் சுட்டு வீழ்த்தின. உடனே அச்சேனை பயந்து பின்வாங்கியது. இதை யறிந்த கிருஷ்ண

ராயர் நாணமும் சினமும் மிக்கிடத் தாமே தலைமை ஏற்று, எஞ்சியிருந்த சேனையோடு முகமதிய சேனை களைத் தாக்கினர். முகமதிய சேனைகள் அவ்விடத்தை விட்டுப் பறந்தோடின. அவற்றைக் கிருஷ்ணராயர் விரட்டிச் சென்றார். கிருஷ்ணா நதியைக் கடக்கும் போது முகமதிய சேனையின் பெரும்பகுதி அதில் மூழ்கி மாண்டது. பின்னர் கிருஷ்ணராயர் திரும்பி வந்து, ஷாவின் சேனைகள் தங்கியிருந்த இடத்தில் தம் படைக்கு இருக்கை தந்தார். அங்கிருந்த பொழுது, சுல்தானின் படைத் தலைவனாயிருந்த சலாபத்கான் 500 போர்த்துகீசிய வீரர்களுடன் வந்து விஜயநகர வீரர்களைக் கொன்று வீழ்த்தத் தலைப் பட்டார். ஆனால் விரைவிலேயே அவன் கைது செய்யப்பட்டான்.

போரில் இறந்த வீரர்களை எரித்துவிட்டுப் பின் னர் கிருஷ்ணராயர் ரெய்ச்சூர் சென்று கோட்டை முற்றுகையைத் திரும்பத் துவக்கினார். போர்த்து கீசிய படைகள் அப்பொழுது கிருஷ்ணராயருக்குப் பேருதவி அளித்தன. அப்படைகளின் உதவியால் ரெய்ச்சூர் கோட்டை வெகு எளிதில் கைப்பற்றப் பட்டது. அவ்வூரில் சுல்தானின் பிரதிநிதியாக இருந் தவரும் கொல்லப்பட்டார். சுல்தானின் படைகள் முற்றும் கிருஷ்ணராயரிடம் சரணடைந்தன. வெற்றி பெற்ற அவர் அவ்வூரிலேயே சில நாட்கள் தங்கியிருந்து, அங்குத் தம் பிரதிநிதியை நியமித்துப் பின்னர் தம் ஊருக்குத் திரும்பினார்.

கிருஷ்ண ராயர் விஜயநகரை அடைந்தவுடன் பீஜபூர் சுல்தான் தம் தூதுவரை அவரிடம் அனுப்பி, ரெய்ச்சூரையும், கைது செய்யப்பட்ட தம் படை வீரர் களையும் உடனே திருப்பித் தருமாறு வேண்டினார்.

ஆதில்ஷா விஜயநகரத்திற்கு வந்து பலர் கூடிய சபை யில் தம் தாள்களை முத்தமிடுவதானால், அவருடைய வேண்டுகோளுக்கு இணங்குவதாகக் கிருஷ்ணராயர் சொல்லி அனுப்பினார். அவ்வாறு செய்ய சுல்தான் உடன்படவில்லை. கிருஷ்ணராயர் பாமினி அரசின் தலைநகராயிருந்த குல்பர்க்கா மீது படையெடுத்துச் சென்று அதை அழித்துத் தரைமட்டம் ஆக்கினார். முன்னிருந்த பாமினி சுல்தானின் மகன் அங்கிருக்கக் கண்ட கிருஷ்ணராயர், குல்பர்க்காவை நிருவகிக்கும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். இவ்வாறாக விஜயநகர, பாமினி அரசுகளுக்கிடையே நடந்து வந்த நெடுநாளைய போர் முடிவுற்றது. கிருஷ்ண ராயருடைய வெற்றி நிச்சயமாயிற்று.

இந்து-முகமதியரிடையே நடைபெற்ற இப் பெரும்போர் இருவகைகளில் தனிச்சிறப்பு வாய்ந்தது. முதலாவதாக இப்போரில் விஜயநகர அரசுக்கு உதவி புரிந்த படைவீரர்கள் எண்ணில் அடங்காதவர். ஆயி ரக்கணக்கான வீரர்களும், யானைகளும், குதிரை களும் ஒன்று சேர்ந்து இச்சண்டையில் விஜயநகரத் தின் வெற்றிக்குக் காரணமாக இருந்தன. இரண் டாவதாக, இந்துக்கள் தங்கள் உயிரைத் துரும்பாக மதித்து, வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு போரிட்டனர். ஆனால் அவர்களுடைய வெற்றிக்குப் பேருதவியாயிருந்தது கிருஷ்ணராயரின் ஊக்கமும், ஆற்றலும், அஞ்சாமையும் ஆகும். மேலும் போர்த்துகீசியர் அளித்த உதவியும் இங்குக் குறிப் பிடத்தக்கது.

ஆனால் இப்போரில் பெற்ற வெற்றி இந்துக்களின் மனத்தில் செருக்கை உண்டாக்கிற்று. இது நாளடை வில் வளர்ந்து, மற்றவர்கள் இவர்களை ஒரு பெருந்

தொல்லே தருபவராகக் கருதும்படி செய்தது. முடிவில் இவர்களுடைய வீழ்ச்சிக்கும் அதுவே காரணமாயிருந்தது. அமரில் அடைந்த அழியாப்புகழ் இந்துக்களுடைய அழிவுக்கும் அடிகோலியது. போரில் முதுகுகாட்டி ஓடிய முகமதியர் சின்னுட்களுக்கு வலியிழந்து இருந்தனர். ஆயினும், தம்முள் ஒற்றுமையை வளர்த்துக் கொண்டு, சீறியெழுந்து இந்துப் பேரரசை அழிக்கத் தலேப்பட்டனர். புகைந்து கொண்டிருந்த எரிமலே கோர புன்னகை புரிந்தது. எழுச்சி பெற்று வானளாவ நின்ற விஜயநகரப் பேரரசின் ஏழடுக்கு மாளிகைகள் தரையை முத்தமிடலாயின.

7. தலைவர்கள் மறைவு

முகமதிய மன்னர்களை வென்ற பின்னர், கிருஷ்ணராயர் தமக்கு வாரிசு நியமிப்பதில் கவனம் செலுத்தலானார். அவருக்கு ஆறு வயதுக் குழந்தை ஒன்று இருந்தது. தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கல்வெட்டொன்று "அரசரின் புதல்வனான திருமலை ஆறு அல்லது ஏழு வயதினன். இவனே அடுத்தாற் போல் பட்டத்திற்குரியவன். இவன் பெயரளவில் செங்கற்பட்டு, தென்னாற்காடு ஆகிய பகுதிகளுக்குத் தலைவனாயுள்ளான்" என்று கூறுகிறது. அக்கல் வெட்டு கி. பி. 1524 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் நாளன்று எழுந்ததாகத் தெரிகிறது. கிருஷ்ணராயருக்குப் பிறகு அரசுரிமைக்குப் போட்டி யிட அவர் புதல்வனைத் தவிர, அவருடைய சகோதரர் கள் மூவரும், மருமகன் ஒருவனும் இருந்தனர். இவர்களால் தம் மைந்தனுக்கு இன்னல் ஏற்படுமோ என்று அஞ்சி, கிருஷ்ணராயர் அரசபதவியினின்றும் விலகித் தம் மைந்தனை அரியாசனத்தில் அமர்த் தினார்; தாமே அவனுக்கு அமைச்சனானார். இவ் வாறு தம் மகன் பட்டமேற்றதற்காகப் பல விழாக் களைச் சிறப்புற நடத்துமாறு கட்டளையிட்டார். விழாக்கள் முடிவடையு முன்னரே அச்சிறுவன் உயிர் துறந்தான். தம் மகன் சாளுவதிம்மனால் விடம் இடப்பட்டு இறந்தான் என்ற ஒரு செய்தியைக் கேட் டதும், கிருஷ்ணராயர் தம் முதன் மந்திரியான திம் மனையும் அவன் மக்கள், சகோதரர்கள் ஆகியோரை யும் சிறையில் அடைத்தார்.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? சாளுவ திம்மனின் புதல்வனான தனுகி என்பவன் சிறையி லிருந்து தப்பி, அருகாமையிலிருந்த தம் உறவினன் ஒருவனுடன் சேர்ந்து கொண்டு, கிருஷ்ணராயருக் குத் தொல்லை தர ஆரம்பித்தான். அஜபோஸியா என்ற சேனாதிபதியின் தலைமையில் சென்ற சேனை தனுகியைக் கைதி ஆக்கியது. அவனும், சாளுவ திம்மனும், அவனுடைய மற்ற சகோதரர்களும் அர சன் முன் கொண்டுவரப்பட்டனர். அவர்களுடைய கண்களைக் குத்திவிடுமாறு அரசர் ஆணையிட்டார். அவ்வாணையும் நிறைவேற்றப்பட்டது. கண்ணிழந்த சில நாட்களுக்குள் திம்மன், நீதிதேவனின் நிழலில் நிம்மதிபெற உயிர் துறந்தார்.

இவ்வாறாக, இடைக்கால இந்தியாவின் ஒப்பற்ற தலைவர் ஒருவர் யாரும் அறியாத நிலையில் மறைந்தார். ஆழமான அறிவு, சீரிய கருத்து, வைரம் பாய்ந்த நெஞ்சம், தளரா ஊக்கம், சலியா உழைப்பு இவையே உருவானவர் சாளுவதிம்மன். சேனைகளுக்குத் தலைமை தாங்கி நடத்துவதில் அவர் தலைசிறந்தவர். போர் புரிவதில் புலி; பாராளுவதில் திறம் படைத் தவர்; நிருவாகத் திறமையில் நிகரற்றவர். சாளுவ திம்மனை நோக்கி கிருஷ்ணராயரே பின்வருமாறு கூறியிருப்பதாகத் தெரிகிறது; "அரசபாரத்தை ஏற் கத் தங்களைப் போன்றவர்கள் இருக்கும் வரையில் எனக்குக் கவலையில்லை. இவ்விஜயநகர அரசுக்கும் அழிவில்லை. ஒரு சிறு புல்லும் உம் கையில் கிடைத் தால் மேருமலையென விளங்கும். மேருமலையையே துரும்பெனும் நிலைக்குத் தாங்கள் கொண்டு வந்து விடலாம். இயலாதனவற்றைச் செய்து முடிக்கத் தங் களையன்றி எவரால் இயலும்?" 'செயற்கரிய செய்

வார் பெரியர்' என்பது பொய்யாமொழி அன்றோ? மங்களகிரி, கொண்டவிடு ஆகிய இடங்களிலுள்ள கல் வெட்டுக்கள் சாளுவ திம்மனைப் பலபடப் புகழ்ந் துரைக்கின்றன.

கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, குருடனாக்கப் பட்டு, உயிரும் துறந்த திம்மன், கிருஷ்ணராயரைக் குழவிப் பருவமுதல் எங்ஙனம் எடுத்து வளர்த்தார், எவ்வாறு அவரைப் பல இன்னல்களினின்றும் காப் பாற்றினார், எவ்வாறு அவருக்குப் பெரியதொரு பேரரசைச் சம்பாதித்துக் கொடுத்தார், எங்ஙனம் அவருடைய அரசாட்சியைத் தாமே ஏற்றுச் சரிவர நடத்தி வந்தார் என்றெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது, அவர்மேல் சாட்டப்பட்ட குற்றம் பொய்யான தென்றே தோன்றுகிறது. ஆனால் செல்வாக்குள்ள அமைச்சன் அரசை அபகரிக்க முயல்வது விஜயநகர சரித்திரத்திலேயே பன்முறை நிகழ்ந்துள்ளது. ஆகவே, வாய்ப்புக்கள் சூழ்ச்சி செய்து சாளுவ திம் மனைக் கொலைக் குற்றம் இழைக்கத் தூண்டியிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. கிருஷ்ணராயருடைய குழந்தையைக் கொல்ல சதி செய்ததைப் பற்றிய உண்மை எதுவாயினும், திம்மன் சாகுமளவும் விஜய நகரத்தின் பெருமையையே தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் என்பதும், அதன் வெற்றிகளுக்கெல் லாம் அவரே முதற்காரணமாவர் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

தம் மகன் இறந்ததைக் குறித்து கிருஷ்ணராயர் வருத்தமுற்றிருந்தபோது, பீஜபூர் சுல்தானான அடில்ஷா மறுபடியும் ஒரு சேனையைத் திரட்டிக் கொண்டு, ரெய்ச்சூர் மீது படையெடுத்தார். இச் செய்தி தம் காதுக்கு எட்டினவுடனே, கிருஷ்ணராயர்

ஒரு பெரும்படையைத் திரட்டிக் கொண்டு அவனை எதிர்க்கச் சென்றார். போர்த்துகீசிய ஆணையாளரின் உதவியை நாடி, அவ்வுதவிக்கு ஈடாகத் தாம் வெல்லப் போகும் பகுதிகளுள் சிலவற்றை அவருக்குத் தருவதாகவும் கிருஷ்ணராயர் வாக்குறுதி செய்தார். இவ்வாறு போருக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் போதே, திடீரென்று கிருஷ்ணராயர் நோய் வாய்ப்பட்டிறந்தார் (1530).

8. குணநலன்கள்

பேய்ஸ் என்ற போர்த்துகீசியர் எழுதி வைத் துள்ள குறிப்புக்களிலிருந்து கிருஷ்ணராயரின் சொந்த வாழ்க்கை மிக சந்தோஷமாகவும், பிறரை வசீகரிக்கக் கூடியதாகவும் இருந்தது என்று தெரி கிறது. அரசனைப் பற்றி அவர் பின்வருமாறு கூறு கிருர். :—

"இந்த அரசன் நடுத்தரமான உயரமும், நல்ல களை சொட்டும் முகத் தோற்றமும், வலிமிக்க உடற்கட்டும் உடையவ ராயிருந்தார்; சிறிது பருமன் அதிகம். முகத்தில் சில அம் மைத் தழும்புகள் இருந்தன. எல்லோரும் அவரைக் கண்டு அஞ்சினுர்கள். மற்ற மன்னர்கள் எல்லோரையும்விட இவர் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தம் நாட்டை ஆண்டு வந்தார்."

"கிருஷ்ணராயர் மிக விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து வந்தார். தினந்தோறும் அதிகாலையில் எழுந்து உடம்பு முழுவதும் நறு நெய்யைப் பூசிக் கொள்வார். அதையே கொஞ்சம் குடித்துப் பிறகு உடற்பயிற்சி செய்வார். பொழுது விடியுமுன் சிறிது தூரம் குதிரை சவாரி செய்வார். இதன் பின்னர் தம் முடைய தினசரி வழிபாடு, பிரார்த்தனை முதலியவற் றைச் செய்வார். பிறகு கொலு மண்டபத்தில் அமர்ந்து அமைச்சர், சேனைத்தலைவர் ஆகியோருடன் அரசியல் அலுவல்களைக் கவனிப்பார். அரசர் வெளி நாட்டாரை அன்புடன் வரவேற்று உபசரிப்பார். அவர் அரண்மனையைவிட்டு அடிக்கடி வெளியே செல் வது கிடையாது. அவ்வாறு வெளியில் செல்லும் போதும் வீரர்கள் புடைசூழத்தான் செல்வார்."

குழந்தைப் பருவத்திலேயே கிருஷ்ணராயர் தம் சிறந்த வருங்காலத்தின் சாயைகளைக் காண்பித்தார்;

துண்டு துண்டாகக் கிடந்த அரசை ஒன்று சேர்த்தார்; தம் முன்னேர் இழந்த நாட்டுப் பகுதிகளைத் திரும்ப வென்றதுடன் புதிதாகவும் சில பகுதிகளைக் கைப்பற்றித் தம் அரசில் சேர்த்துக் கொண்டார்.

இனி, கிருஷ்ணராயரின் பண்புகளைப் பற்றிச் சிறிது கூறுவோம். கிருஷ்ணராயர் இடைவிடாத உழைப்பும், அதற்கேற்க சிறந்த உடல் வலிமையும் பெற்றிருந்தார். அவர் ஒரு சிறந்த படைத்தலைவர். நெருக்கடியான நிலைமையிலும் நிதானத்தை நழுவ விடாமல் நடந்து கொள்வார். ரெய்ச்சூர் போரில் இப்பண்பு மிகத் தெளிவாகக் காணப்பட்டது. அவர் தம் எதிரிகளை மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் நடத்தி வந்தார்.

வைரத்தை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் ஓர் ஒளிக்கதிர் தெரிவதுபோல, கிருஷ்ணராயருடைய வாழ்க்கையை எக்கோணத்திலிருந்து பார்த்தாலும் அது பெருமைமிக்கு விளங்குகிறது. இளம் பிராயத்தில் அவர் ஆழ்ந்த அரசியல் கருத்துக்கள் அனைத்தையும் சாளுவ திம்மனிடம் கற்றறிந்தார். இவ்வறிவைத் தாமே அரசு புரிந்த காலத்தில், மிகச் செம்மையான வழியில் பயன்படுத்திஞர். பிரபுக்களையும், சேனைத் தலைவர்களையும் ஒடுக்கிவைத்துத் தம் பேரரசைப் பரப்ப வேண்டுமென்ற எண்ணம் மட்டும் அவன் மனத்தில் என்றும் இருந்துவந்தது. இவ்வெண்ணத்தை அவர் நிறைவேற்றிக் கொண்டார். ஸீவல் என்ற ஆங்கில ஆசிரியர் கிருஷ்ணராயரைப் பற்றி பின்வருமாறு கூறுகிருர் :—

“கிருஷ்ணராயர் சட்டப்படி மாத்திரம் அரசரல்லர். நடைமுறையில் அவர் மிகுந்த அதிகாரமும் நிறைந்த செல்வாக்கும் பெற்ற மன்னராகத் திகழ்ந்

தார். அவர்தான் உண்மையில் அரசனென்று அழைக்கப்படத் தகுதியுள்ளவர். மிகுந்த ஆற்றலும், அதிகாரமும் கொண்ட அமைச்சரால் உதவி செய்யப்பட்ட போதிலும், ஒருபோதும் கிருஷ்ணராயர் அவ்வமைச்சரின் கைப்பாவையாக இருக்கவில்லை. தம் அமைச்சரின் அறிவை நாட்டின் நலனுக்காகவும், மக்களின் மாட்சிக்காகவும் பயன்படுத்திக் கொண்டார். மக்கள் வாழ்வு தம் வாழ்வென்றும், மக்களின் நலன் தம் நலனென்றும் கருதிய மாண்புறு மன்னர் அவர் தம்மாலியன்ற வரையில் நாட்டு மக்களோடு அவர் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு, அவர்களுடைய வாழ்க்கையை வளம்பெறச் செய்வதற்குரிய வழிகளை வகுத்தார்''.

கிருஷ்ணராயன் கடவுட்பக்தி நிறைந்தவர். ஒன்றோடொன்று மோதும் கேடயங்களின் சத்தம், வாள்கள் உராய்வதால் எழும் ஒலி, யானைகள் பிளிறும் சத்தம் ஆகிய இவற்றிற்கிடையிலும் கிருஷ்ணராயருடைய கடவுட் பக்தியும், ஆண்டவனிடத்திருந்த முழு நம்பிக்கையும் சிறிதும் மங்கவில்லை.

கிருஷ்ணராயர் இலக்கியச் சுவை மிக்கவர். குழவிப் பருவமுதலே கல்வியில் மிகுந்த பற்றுடையவரா யிருந்தார்; சிறு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றார்; பின்னர் வடமொழி, தெலுங்கு ஆகிய இரண்டிலும் சிறந்த புலவராகத் திகழ்ந்தார். அவர் தம் சுந்தரத் தெலுங்கினில் 'அமுக்த மால்யதா' என்ற ஒரு சிறந்த கவிதை நூலை இயற்றியுள்ளார். அந்நூல் தெலுங்கிலுள்ள ஐந்து மகா காவியங்களுள் ஒன்றாக இடம் பெற்றுள்ளதே அதன் பெருமைக்குத் தக்க சான்றாகும்.

அந்நூல் மன்னன் கடமையையும், அவன் மதி செல்லவேண்டிய வழியையும், நாட்டின் நிருவாகம் நன்கு நடைபெறுவதற்கு வேண்டிய நியதிகளையும் எடுத்துரைக்கின்றது. மேலும் வடமொழியிலுள்ள **மதலஸா சரித்திரம், சத்யவாது ப்ரேரணம், ரஸமஞ்சரி, சகல கதாசார சங்க்ரகம், ஞான சிந்தாமணி** ஆகிய ஐந்து நூல்களும் கிருஷ்ண ராயரால் இயற்றப்பட்டனவே. இவை தவிர, **ஜாம்ப வதி பரிணயம்** என்ற வடமொழி நாடகமொன்றை எழுதிப் புலவர்களின் பாராட்டுதலைக் கிருஷ்ணராயர் பெற்றூர்.

அவருடைய பரந்த மனப்பான்மையும் இலக்கியச் சுவையும், அவருடைய அவைக்குப் பலநாட்டுக் கவி ஞர்களையும், பெரும் புலவர்களையும் வசீகரித்தன. தம் ஓய்வு நேரங்களில் சமயச்சார்பானதும், இலக்கியச் சார்பானதுமான பொருள்களைப் பற்றி அவர்களுடன் அளவளாவி அளவிலா மகிழ்ச்சி அடைவது அவர் இயல்பு.

கிருஷ்ணராயருக்கு எத்தனை மனைவியர் இருந்த னர் என்று துணிந்து கூற இயலவில்லை. நூனிஸ் என்பார் அவருக்கு நான்கு மனைவியர் இருந்தன ரென்றும், பேய்ஸ் என்பார் அவருக்குப் பன்னிரண்டு மனைவியர் இருந்தனரென்றும் கூறுவது ஆராய்ச்சிக்கு உரியது. நந்தி திம்மண்ணு என்பவரால் **பாரிஜாதா பஹரணமு** என்ற அழகிய தெலுங்குக் காவியம் இயற்றப்பட்டுள்ளது. கிருஷ்ணராயர் தம் பட்டத் தரசியான சின்னு தேவியின்மீது யாது காரணம் பற்றியோ சினங்கொண்டு அவளை விடுத்தாரென்றும், அவளை மறுபடியும் அரசர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்யப் புலவர் இக்காவியத்தை இயற்றினுரென்றும்

அறியக்கிடக்கிறது. இந்நூலிலிருந்து கிருஷ்ண ராயருக்கு இரு மனைவியர் தானென்று அறிகிறோம். ஆனால் எல்லாக் கூற்றுகளிலும் சின்னாதேவி என்ற பெண்ணின் பெயர் தவறாது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவள்தான் கிருஷ்ணதேவர் மனத்தில் முதலிடம் பெற்றிருந்தாள் என்று ஒருவாறு முடிவு செய்யலாம். இவள் முதலில் அரண்மனையில் ஓர் அடிமையாக இருந்தாளென்றும், தன் அழகாலும், நற்பண்புகளாலும் படிப்படியாக அரசனுடைய அன்பைப் பெற்று, அவருடைய பட்டத்தரசியாகவும் திகழ்ந்தாள் என்றும் சில நாட்டுப் பாடல்கள் கூறுகின்றன. இவளைத் தவிர, அன்னபூர்ணா தேவி, திருமலைதேவி என்று இரு பெயர்கள் சில தெலுங்கு நூல்களில் காணப்படுகின்றன.

கிருஷ்ணதேவருக்கு இரு பெண்மக்களிருந்தனர். அவர்களுள் திருமலாம்பா என்பவள் கர்நாடக வமிசத்தைச் சேர்ந்த ராமராஜா என்பவரை மணந்தாள். அவள் தங்கையான வெங்கலாம்பா ராமராஜனின் இளைய சகோதரனை திருமலைராயரை மணந்தாள். மன்னனுக்கு எத்தனை ஆண்மக்களிருந்தனர் என்று அறியக்கூடவில்லை. திருமலை என்ற பெயருடைய ஒரு புதல்வனிருந்தான் என்பதுமட்டும் துணிவாகத் தெரிகிறது.

9. அரசியல் நிருவாகம்

விஜயநகரப் பேரரசு ஒரு முடியரசாகவே திகழ்ந்தது. முடியரசில் அரசியல் நிருவாகம் அரசனைப் பொறுத்ததாகவே அமையும். அரசன் திறமை மிக்கவனாக இருக்கும் காலங்களில் நாடும் நன்கு ஆட்சி புரியப்படும். அரசன் வலிமையற்றவனாக இருந்தால் ஆங்காங்குள்ள அரசப் பிரதிநிதிகளும் ஆணையாளர்களுமே தங்கள் விருப்பம்போல் நாட்டை ஆளத் தலைப்படுவர்.

விஜயநகரப் பேரரசில் அரசியல் நிருவாகம் முழுவதும் அரசன் கையிலிருந்தது. அரசனுடைய அதிகாரம் அளவிட முடியாதது. சட்டமியற்றும் அதிகாரம் அவனிடம் இருந்ததால், அரசனிட்ட சட்டங்களை ஒதுக்கி வைக்கும் திறமையோ அதிகாரமோ நாட்டில் வேறு யாருக்கும் கிடையாது. அரசன் ஒரு சர்வாதிகாரியாகவே விளங்கி வந்தான். குடிகளும் விருப்பத்துடன் அவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். அரசன் கடவுளின் அம்சமாகக் கருதப்பட்டான். இந்து அரசர்கள் குடிமக்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே தங்களைக் கடவுளின் அம்சமாகக் கருதினர்.

நாட்டின் நிருவாகத்தில் அரசனுக்கு ஆலோசனை கூற ஒரு சபை இருந்து வந்ததாகத் தெரிகிறது. நாட்டின் நன்மையை நாடும் சேனைத்தலைவர்களும் பிரபுக்களும் அச்சபையில் இடம் பெற்றிருந்தனர். அச்சபையின் உதவியைக் கொண்டே அரசன் நாட்டை ஆண்டு வந்தான். இருப்பினும், இச்சபை வெறும் ஆலோசனை கூறும் சபையாக மட்டிலும் இருந்ததே ஒழிய, இதற்கென்று தனியாகச் சட்டமியற்றும் அதிகாரம் கிடையாது. அரசன் அச்சபை

யின் சொற்படி நடக்கவேண்டிய கட்டாயமுமில்லை. அச்சபையினரின் வேலை ஆலோசனை கூறுவதோடு முடிவுறும்.

அதிகாரம் அளவில்லாமல் தரப்பட்டிருப்பினும் கிருஷ்ணராயர் ஒரு நாளும் கொடுங்கோல் ஆட்சி புரியவில்லை. குடிகள் செழித்து வாழ்ந்தாலன்றித் தாம் இன்புற்று வாழ இயலாது என்ற உண்மையை அவர் நன்கு அறிந்திருந்தார். “குடி உயரக் கோன் உயரும்” என்பது ஔவைப் பிராட்டியின் அழியா வாக்கன்றோ? கிருஷ்ணராயர் மக்களின் நலனுக்காக இடைவிடாது வருந்தி உழைத்தார். தம் அதிகாரத்தை அமைச்சர்கள் மூலமாகச் செலுத்தி வந்தார். தற்காலத்தில் உள்ள மந்திரி சபைக்கு ஒப்பானது இவ்வமைச்சர் குழு. அமைச்சர்கள் பிரதானிகள் என்று அழைக்கப்பட்டனர். இச்சபையில் மிக முக்கியமானவர் முதல் அமைச்சராவர். நாட்டிலேயே அரசனுக்கு அடுத்தபடி அதிகாரமும் செல்வாக்கும் பெற்றுத் திகழ்ந்தவர் முதலமைச்சரே.

ஓர் அரசன் இறந்த பிறகு, அவனுடைய குழந்தைகள் வயதிற் சிறியவர்களாயிருந்தால், முதலமைச்சரே குழந்தைக்கும் நாட்டிற்கும் காப்பாளனாக இருந்து செயலாற்றுவார். போர்க் காலங்களில் நாட்டின் சேனைக்குத் தலைமையும் அவரே ஏற்பார். நிருவாகம், இராணுவம் ஆகிய இரு துறைகளிலும் நாட்டின் நலன் முழுவதையும் கவனிக்கும் பொறுப்பு முதலமைச்சரையே சாரும். முதலமைச்சருக்கு அடுத்தபடி இருந்தவர் ஆலோசகர். இவருடைய வேலை என்னவென்று நமக்குத் திட்டமாகத் தெரியவில்லை. இருப்பினும் இவர் எந்தத் துறையிலும் அரசனுக்கு ஆலோசனை கூறுபவராக இருந்திருக்கக்

கூடும் என்று ஒருவாறு கூறலாம். இவருக்கு அடுத்த படியாக, நாட்டின் நிதித் துறையைக் கண்காணிக்க ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவர்களைத் தவிர இன்னும் சில அமைச்சர்களும் இருந்தனர்.

நிருவாகம் நன்கு நடப்பதற்காக விஜயநகரப் பேரரசு ஏறத்தாழ 200 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பகுதியும் இராஜ்யம் அல்லது மண்டலம் என்று வழங்கப்பட்டது. அம் மண்டலங்கள் தம் அளவில் வேறுபட்டனவாயிருந்தன. சுற்றிலும் சில ஏக்கர் நிலமுள்ள ஒவ்வொரு சிறு மலைக் கோட்டை (துர்க்கம்) யும் மண்டலம் என்று அழைக்கப்பட்டது. நம் சென்னை மாகாணத்தில் தற்காலத்திலிருக்கும் மாவட்டங்களுள் இரண்டு அல்லது மூன்று சேர்ந்த அளவுள்ள பெரிய நிலப்பரப்பும் மண்டலம் என்ற பெயராலேயே குறிக்கப்பட்டது. சிற்சில சமயங்களில் அநேக மலைக் கோட்டைகளும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளும் ஒன்றுகச் சேர்க்கப்பட்டு மண்டலம் அல்லது இராஜ்யம் என்று பெயரிடப்பட்டன. கிருஷ்ணராயன் பேரரசில் அடங்கியிருந்த மாகாணங்களுள் துளிநாடு, லெக்னி, கனரி, உதயகிரி சோழமண்டலம் ஆகிய ஐந்தும் மிகப்பெரிய நிலப்பரப்பை உடையனவாயிருந்தன.

ஒவ்வொரு மண்டலமும் ஒரு பிரதிநிதி அல்லது நாயகர் வசம் ஒப்புவிக்கப்பட்டது. பெரியதும் முக்கியமானதுமான சில மாகாணங்கள் அரசபரம்பரையைச் சேர்ந்தவர்களால் கண்காணிக்கப்பட்டு வந்தன. ஒரு மாகாணத்தின் உள்நாட்டு அலுவல்களில் அரசன் தலையிடமாட்டான். ஆதலால் அந்தந்த மாகாணத் தலைவர்கள் மிக்க அதிகாரம் உடையவர்களானுர்கள்.

அவர்களே, தம் கீழுள்ள குடிகளுக்கு உழவு நிலத்தைப் பகிர்ந்து கொடுத்தனர்.

ஒவ்வொரு பிரதிநிதியும் ஆண்டிற்கொரு முறை முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையை அரசனுக்குச் செலுத்த வேண்டும். ஆனால் இத் தொகையை நிர்ணயிக்க எந்தக் குறிப்பிட்ட முறையும் பின்பற்றப்பட்டு வந்ததாகத் தெரியவில்லை. பெரும் பாலும் மாகாண வருமானத்தின் நான்கில் ஒரு பங்கோ அல்லது மூன்றில் ஒரு பங்கோ அரசனுக்குத் தரப்பட்டது. நாட்டின் பொது நலனுக்காகவும் பாது காப்புக்காகவும் தன் சொந்தச் செலவிலேயே ஒவ்வொரு மாகாணத் தலைவனும் ஒரு சேனையை வைத்திருந்தான். அரசனின் நேர் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளைத் தவிர, சில பகுதிகள் அவனைத் தங்கள் தலைவனாக ஏற்றுக்கொண்ட பிரபுக்கள் மூலமாக ஆளப்பட்டு வந்தன. அவர்களுடைய உள் நாட்டு அரசாட்சியில் அரசன் தலையிடமாட்டான். ஆனால் அப்பகுதிகளின் வெளிநாட்டு அலுவல்கள் யாவும் விஜயநகர அரசரின் அதிகாரத்திற்கு உட் பட்டனவாகவே இருந்தன. அப்பிரபுக்கள் மன்ன னுக்கு ஆண்டிற்கொரு முறை திறைப்பணம் செலுத்தி வந்தனர். போர்க் காலங்களில் அரசனுக்குப் பணமும் படையும் தந்து உதவுவதும் அப்பிரபுக்களின் பொறுப் பாயிருந்தது.

10. அரசாங்க வருவாய்

நாட்டின் பல பகுதிகளை ஆண்டுவந்த தலைவர்கள் கட்டிய திறைப்பணமே அரசனது வருவாயில் பெரும் பகுதியாயிருந்தது. பேய்ஸ், நூனிஸ் என்ற இரு யாத்ரீகர்களின் குறிப்புக்களிலிருந்தும் இத் தொகை மிக அதிகமாக இருந்தது என்றறிகிறோம். திறைப் பணத்திற்கு அடுத்தாற் போல் அரசனுக்கு வருமானம் வரிப் பணம் மூலம் கிடைத்தது. நிலவரி, சொத்துவரி, வியாபார வரி, தொழில் வரி, இராணுவ வரி, சமூக வரிகள் அபராதத் தொகைகள் ஆகியவற்றின் மூலம் பெருந் தொகைகள் அரசாங்கத்திற்குக் கிடைத்தன. இவற்றுள் சிலவற்றைப் பற்றி ஆராய்வோம்.

நிலவரியே அரசாங்கத்தின் முக்கிய வருமான மாக இருந்தது. நஞ்செய், புன்செய் நிலங்களின் மீது அவற்றின் தகுதிக்கேற்ப வரிவிதிக்கப் பட்ட தாகத் தெரிகிறது. சொத்து வரியும் சொத்தின் மதிப் பைப் பொறுத்தே விதிக்கப்பட்டது. எந்த வகுப்பைச் சேர்ந்தவராயினும் மணவரி விதிக்கப்பட்டது. ஒரிஸா விலிருந்து திரும்பி வந்த பிறகு கிருஷ்ண தேவராயர் இவ்வரியை நீக்கினார் என்று தெரிகிறது. ஒவ்வொரு தொழிலாளியும் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும் என்றிருந்தது. வருமானத்திற்கு ஏற்ப இவ்வரி கணக்கிடப்படவில்லை. செய்யும் தொழிலுக்கு ஏற்ப இவ்வரி விதிக்கப்பட்டது. சதாசிவராயர் நாவிதர் மீதிருந்த தொழில் வரியை நீக்கினார் என்று குறிப்புக்கள் கூறுகின்றன. வாணிகப் பொருள் களின் மீது நாட்டிற்குள்ளேயே சில குறைந்த வரிகள் விதிக்கப்பட்டன. இவை மூன்று வகைப்படும் என்று ரைஸ் என்னும் ஆசிரியர் கூறுகின்றார். அவை

'ஸ்தலதாயம்', 'மார்க்கதாயம்', 'மாமூலதாயம்', என்று அழைக்கப்பட்டன. ஸ்தலதாயம் ஓர் இடத்திற்குள் கொண்டுவரப்படும் பொருள்கள் மீது விதிக்கப்படும் சுங்க வரியாகும். மார்க்கதாயம் ஒரு மாவட்டத்தின் வழியாகச் செல்லுகின்ற பொருள்கள் மீது விதிக்கப்பட்ட வரியாகும். மாமூலதாயம் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்மீது விதிக்கப்பட்ட வரி எனத் தெரிகிறது. இவை தவிர இன்னும் பலவகையான வாணிக வரிகளும் இருந்ததாகத் தெரிகிறது.

சுங்கவரி அரசாங்கத்தால் நேரடியாக வசூலிக்கப் படவில்லை. ஆங்காங்கே அவை குத்தகைக்கு விடப் பட்டன. குத்தகை எடுத்தவர்கள் அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தினர். இதனால் நாடு முழுவதும் ஒரே விகிதத்தில் வரி வசூலிக்கப் படவில்லை என்று தெரிகிறது. 'கோட்டை மகமை' என்ற பெயரில் இராணுவ வரி வசூலிக்கப்பட்டது. வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளிலிருந்து அவற்றைக் காப்பதற்காக வரி வசூலிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்வாறு அநேக வரிகள் வசூலிக்கப்பட்டதால் மக்கள்மீது வரிப்பளு சிறிது அதிகமாக இருந்ததாகவே தெரிகிறது. சித்தல்துர்க்கம் மாவட்டத்திலுள்ள ஒரு கல்வெட்டில் மக்களால் சில வரிகளைக் கட்ட இயலவில்லை என்றும், அதைத் தீர விசாரித்துச் சரியென அறிந்த பின்னர், அரசன் அவ்வரிகளை நீக்கி விட்டாரென்றும் காணக்கிடக்கிறது. மைசூர் மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் சுங்கவரிகளைச் செலுத்த மக்கள் மறுத்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. விஜயநகரத்திற்குள் கொண்டுவரப்பட்ட எல்லாப் பொருள்கள் மீதும் சுங்கவரி வசூலிக்கப்

பட்டது. கிருஷ்ணராயர் காலத்தில் விஜயநகரப் பேரரசிற்குப் பல துறைகளிலும் கிடைத்த மொத்த வருமானம் ஆண்டிற்கு 81 கோடி பகோடாக்கள் என்று கர்னல் மாக்கென்ஸி என்பாருடைய குறிப்புக் களிலிருந்து தெரியவருகிறது.

அக்காலத்தில் பலவிதமான நாணயங்கள் இருந் தன. ஆனால் அவையனைத்தும் பொன் அல்லது வெள்ளி அல்லது செப்பு உலோகத்தால் ஆனவை. அந்நாணயங்களுள் காட்யாறு, காசு, பகோடா, பணம், பரதயோ, வராகன், சின்னம், பிராங் ஆகியவை பெரும்பாலும் வழக்கிலிருந்தன. அரசாங் கத்திற்கு இருந்த வருமானம் பெரும்பாலும் தானிய வகையிலேயே பெறப்பட்டது. ஆயினும் சிற்சில போது நாணயங்களாகவும் வரிகள் தரப்பட்டன. செஞ்சி, ஹம்பி, உதயகிரி போன்ற இடங்களிலுள்ள கோட்டைகளில் விசாலமான தானியக்களஞ்சியங்கள் பல இருப்பதை இன்றைக்கும் நாம் காணலாம். இவை அரசாங்கத்திற்குத் திறையாகவும், வரியாகவும், அபராதமாகவும் வரும் தானியங்களைச் சேமித்து வைக்கவே கட்டப்பட்டன என்பது புலனாகும்.

வரிகளை வசூலிப்பதற்கு நான்கு முறைகள் கையாளப்பட்டன. அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் சில இடங்களில் நேரடியாக வரி வசூலித் தனர். சில வரிகள் தனி மனிதர்களிடம் கட்டுக் குத்த கைக்கு விடப்பட்டன. இதைத் தற்காலத்திய 'ஜமீன் தாரி முறை'க்கு ஒப்பிடலாம். வேறு சில இடங்களில் ஒரு கிராமமோ அல்லது சமூகமோ தாங்கள் செலுத்த வேண்டிய வரியை ஒன்று சேர்த்துச் செலுத்தின. இறுதியாக அரசனால் மானியமாகத் தரப்பட்ட பகுதி களில் நாயகர்கள் என்ற ஆணையாளர்கள் வரி வசூ

லிக்கும் உரிமை பெற்றிருந்தனர். தாங்கள் வசூலித்த வரியில் ஒரு பகுதியையே அவர்கள் அரசனுக்குச் செலுத்தினர்.

வரி வசூலிப்பதில் கருத்துடன் இருந்தது போலவே, குடிகளின் நன்மையிலும் அரசாங்கம் கருத்துடன் இருந்தது. பஞ்சம், வெள்ளம் முதலிய வற்றுல் மக்கள் அவதியுறும்போது வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டன என்று அறிகிறோம். கோயில்கள், மடங்கள் முதலிய பொது இடங்களின் மீது வரி விதிக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் வருமானம் அதிகமாயிருந்தது போலவே செலவும் அதிகமாயிருந்ததாகத் தெரிகிறது. அரசாங்க வருவாயின் பெரும்பகுதி இராணுவத்திற் காகச் செலவிடப்பட்டது. ஏராளமான குதிரைகளும் யானைகளும் வாங்கப்பட்டன. அவற்றின் பராமரிப் பால் ஏராளமான பொருள் செலவிடப்பட்டது. இராணுவத்திற்கு அடுத்தாற்போல அரசாங்க வரு மானத்தில் ஒரு பகுதி அறத்துறையில் செலவிடப் பட்டது. மேலும் அரண்மனை, அந்தப்புரங்கள் மீதும் ஏராளமான பொருள் செலவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. செலவழிந்தது போக மீதி வருவாய் சேர்த்து வைக்கப்பட்டது. "கிருஷ்ண தேவராயர் ஆண்டொன்றிற்கு ஒரு கோடி பகோடாக்கள் சேமித்து வந்தார்" என்று பேய்ஸ் என்னும் யாத்ரீகர் கூறு கிருர்.

நம் நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படை யாக இருந்ததும் தற்காலத்தில் இருப்பதும் உழவே யாகும். ஆதலின், மக்களின் நன்மையைக் கருத்திற் கொள்ளும் எந்த இந்திய அரசனும் முதலில் நீர்ப் பாசன வசதிகளைப் பெருக்கவேண்டுவது இன்றியமை

யாததாகும். அவற்றில் தலைமையானது, தண்ணீரைத் தேக்கி நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்காகக் கிருஷ்ணராயர் கட்டிய 'பெரிய ஏரி'யாகும். இரண்டு மலைத்தொடர்களுக்கிடையே இது கட்டப்பட்டது. மலைச் சரிவுகளிலிருந்து தண்ணீர் இதில் வந்து சேரும். மூன்று கல் தொலைவிலிருந்து, மற்ற மலைச் சாரல்களில் பெய்யும் மழைநீர் குழாய்கள் மூலம் கொண்டுவரப்பட்டது. இவ்வேரியை வெட்டுவதற்காக அவ்விடத்திலிருந்த ஒரு மலையே உடைத்துப் பெயர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வேலையைச் செய்து முடிக்கக் கிருஷ்ணராயர் ஒரு போர்த்துகீசிய பொறியியல் வல்லுநரை நியமித்திருந்தார் என்று தெரிகிறது.

11. நீதிநெறி முறை

பேரரசின் தலைநகரான விஜயநகரத்தில் நியாய விசாரணையை அரசரே நேரில் கவனித்து வந்தார். அரசரைத் தவிர வேறு பல அதிகாரிகளும் நியாயம் வழங்கி வந்தார்கள் என்று தெரிகிறது. கிருஷ்ண ராயரின் முதல் அமைச்சரான சாளுவதிம்மன் விஜய நகரின் தலைமை நீதிபதியாகவும் இருந்தார் என்று எண்ண இடமிருக்கிறது. 'தர்மபிரதி பாலகர்' என்னும் பட்டத்தை அவர் பெற்றிருந்தார். மாகாணங்களில் நாயகர்களால் தீர்ப்புச் செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்கள் தவறென்று,கருதிய மக்கள், அரசனிடம் மறுபடியும் முறையிட்டுக் கொள்வர். அவர் வழக்கைத் தீர விசாரித்து நியாயம் வழங்குவார்.

அரசரால் நியமிக்கப்பட்ட அல்லது அனுமதி அளிக்கப்பட்ட நீதிபதிகள் நாடெங்கும் இருந்தபோதிலும் கூட, கிராமங்களில் நம் நாட்டின் புராதன பஞ்சாயத்து முறையும் வழக்கிலிருந்து வந்ததாகத் தெரிகிறது. கிராம நியாய மன்றங்களில் கிராமத்திலுள்ள வயது முதிர்ந்த பெரியோரே வழக்குகளைத் தீர்த்து வைத்தனர். மதச் சார்பான வழக்குகளைத் தீர்ப்பதில் அரசர் சமயத் தலைவர்களின் உதவியை நாடினர்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் அதன் பிரதானி அல்லது நாயகனே, தலைமை நீதிபதியாகவும் இருந்து வந்தார். பெருங் குற்றங்களுக்கு விதிக்கப்பட்ட

தண்டனைகள் மிகக் கடுமையாயிருந்தன. சாதாரண திருட்டுக் குற்றத்திற்குங்கூட குற்றவாளியின் ஒரு கை அல்லது கால் வெட்டிவிடப்படும். பெரிய திருடனு யிருந்தால் அவனுடைய தாடையின் கீழ் ஓர் இரும்பு கொக்கி போடப்பட்டு அவன் தொங்கவிடப்படுவான். நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை ஒருவன் கற்பழிக்க முற்பட்டால் அவனுக்கு மிகவும் கடுமை யான தண்டனை விதிக்கப்பட்டது. அரசனுக்கு ஒரு பிரபு துரோகம் செய்தால், அவன் வயிற்றின் வழியாக ஒரு மரக்கட்டை செலுத்தப்பட்டது. கொலைக் குற் றத்திற்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இத்தண்டனைகளைப் பற்றி நூனிஸ் என்பவரும், அப்பாரசீக மன்னனது தூதராய் இந்தியாவிற்கு வந் திருந்த அப்துர் ரஸாக் என்பாரும் விளக்கமாகக் கூறியுள்ளனர்.

தண்டனைகள் கடுமையாயிருந்தனவென்றாலும், கண்மூடித்தனமாகத் திருடினவனுக்கெல்லாம் கை வெட்டி எறியப்பட்டதென்றோ, அரசத் துரோகம் செய்தவனுக்கெல்லாம் வயிற்றுக்குள் மரக்கட்டை செலுத்தப்பட்டதென்றோ கூறிவிட முடியாது. குற்ற வாளிகளை அவ்வூரிலுள்ள நீதிபதிகளும், மக்கள் தலை வர்களும் திருத்த முற்படுவர். இன்றேல் சிறிது தண் டனை விதிக்கப்பட்டது. அங்ஙனம் செய்தும் அவன் திருந்தவில்லையெனின், கடுந்தண்டனை விதிக்கப்பட் டது. இவ்வாறு பலவித முறைகள் கையாளப்பட்டன. மற்றும் குற்றவாளியின் சமூக, பொருளாதார, அரசி யல் நிலை, குற்றத்தின் கொடுமை ஆகியவற்றைத் தீர ஆராய்ந்த பின்னரே தீர்ப்புக் கூறப்பட்டது. நீதி வழங்குவதில் மக்களிடத்துச் சிறிது கருணை காட்டப் பட்டதென்று தெரிகிறது. 18, 16 ஆம் நூற்றுண்டுகள்

வரை ஐரோப்பாவில் குற்றங்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனைகள் மிகக் கடுமையாயிருந்தன என்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. இவ்வாறிருக்க, பதினாறும் நூற்றாண்டில் விஜயநகர அரசில் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன என்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் மேற்கூறிய செய்திகளால், மக்களிடத்துக் குற்றங்களைத் தடுக்க அரசன் மிக்க ஊக்கம் கொண்டிருந்தான் என்பது புலனாகிறது.

ஊர்க் காவலுக்கான அதிகாரிகள் விஜயநகர அரசில் இரண்டு வகைப்பட்டனர். ஒரு வகையினர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு அரசாங்க வருவாய் பெற்று வந்தனர். மற்றொரு வகையினர் மக்களிடமிருந்து வருவாய் பெற்று வாழ்ந்தனர். நியாயம் தவறாது ஒழுங்காக நடந்து வந்த ஒருவனுக்கு யாதேனும் துன்பம் நேரிட்டால், அதை உடனே அரசனிடம் சென்று நேரே முறையிட்டுக் கொள்ள அவனுக்கு உரிமையிருந்தது. அரசன் அக்குறையைத் தீர விசாரித்துக்கொண்டு, எந்த மாகாணத்தில் அக்குற்றம் நேர்ந்ததோ அம்மாகாணத் தலைவனை அழைத்துக் குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டனை அளிக்குமாறு கட்டளையிடுவான். அவன் அவ்வாறு செய்யத் தவறினால் அவனுக்கே தகுந்த தண்டனை விதிக்கப்படும்.

மாகாணங்களில் ஆட்சி செய்துவந்த நாயகர்கள், 'காவல்காரர்'களெனப் பெயர் கொண்ட அதிகாரிகளை ஊர்க் காவலுக்காக நியமித்தனர். இக்காவல்கார்கள் பெரும்பாலும் கள்ளர் மரபைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இவர்கள் தங்களுக்குக் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் தலையாரிகள் என்பவரை நியமித்தனர். காவல்காரர்களுக்கும் தலையாரிகளுக்கும் கிராம மக்க

ளாலேயே ஊதியம் அளிக்கப்பட்டது. அறுவடை காலங்களில் தானியங்களும், மற்ற விழாக் காலங்களில் பணமும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. கிராமங்களில் நடக்கும் திருட்டுக்களை அவர்கள் கண்டு பிடித்தனர். அவர்களால் திருட்டு கண்டுபிடிக்கப் படாவிட்டால், திருட்டுப் போன சொத்தின் மதிப்பைச் சொந்தக்காரர்களுக்கு அவர்கள் கொடுத்தனர். இவ்வித ஏற்பாட்டால் மக்கள் நாட்டில் பொதுவாகத் திருடர் பயமின்றி வாழ்ந்து வந்தனர் என்று தெரிகிறது.

12. படைத்திறம்

கிருஷ்ணராயனின் வெற்றிகளுக்குக் காரணமா யிருந்த சேனை மிகப்பெரியது. பேய்ஸ் என்ற ஆசிரியரின் கூற்றுப்படி அது 10 இலட்சம் வீரர்கள் கொண்டது. குதிரைப்படையின் எண்ணிக்கை 35,000. நெருக்கடியான காலங்களில் மறுபடியும் ஆட்களைத் திரட்டி, அரசன் 20 இலட்சம் வீரர்களையும் போரில் ஈடுபடுத்தினான். யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை, பீரங்கிப் படை, ஆகிய அனைத்தும் கிருஷ்ணராயர் வசமிருந்தன. இவை தவிர, ஒரு சிறிய கப்பற்படையும் அவர் வசமிருந்ததாகத் தெரிய வருகிறது. யானைகளும் குதிரைகளும் போர்க் காலங்களில் முழுக் கவசம் அணியப்பட்டிருந்தன. குதிரைகளின் நெற்றியில் வெள்ளி அல்லது தங்கத் தாலாகிய தகடுகள் கட்டித் தொங்கவிடப்பட்டன. கயிறுகளாகத் திரிக்கப்பட்ட வெள்ளிக் கம்பிகளால் அவற்றின் கடிவாளங்கள் செய்யப்பட்டிருந்தன. யானைகளின் முதுகில் விலையுயர்ந்த கம்பளங்கள் போடப்பட்டிருந்தன. அவற்றின் தந்தங்களின் நுனியில் கூரிய கத்திகள் செருகப்பட்டிருந்தன. குதிரைகள்மீது செல்லும் வீரர்கள் கவசமணிந்து, கத்தி, ஈட்டி முதலியவற்றை ஏந்திப் போருக்குச் செல்வர்.

கிருஷ்ணராயருடைய சேனை போர்க்காலங்களில் மட்டும் சேகரிக்கப்படவில்லை. ஒழுங்கான பயிற்சி தரப்பட்டு, சரிவர ஊதியம் அளிக்கப்பட்ட நிரந்தர சேனையாக இது இருந்தது. இராணுவத்திலிருந்தவர்களுக்கு ஆண்டுக்கொரு முறையே ஊதியம்

அளிக்கப்பட்டது என்று பேய்ஸ் குறிப்பிடுகிருர். சிறந்த வீரர்களை உண்டாக்குவதில் சேனைத் தலைவர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டியிட்டனர். கோழைத்தனம் என்பதையே அறியாத சிறந்த இளங் காளைகள் பெருவாரியாக இராணுவத்திற் சேர்ந்தனர். சேனைக்கு வீரர்களைப் பொறுக்கி யெடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. ஒருவனைச் சேனையில் சேர்த்துக்கொள்ளு முன்னர் அவனுடைய அளவையும் சில அங்க அடையாளங்களையும் அரசாங்க அலுவலாளர்கள் குறித்துவைத்துக் கொள்வர். சேனையை விட்டு ஓடுவது மிகப் பெரிய குற்றமாகக் கருதப் பட்டது. மாகாணத் தலைவர்கள் வைத்திருந்த சேனைகளைத் தவிர, அரசரே தம் சொந்தச் செலவில் ஒரு பெரிய சேனையை வைத்திருந்தார்.

எல்லைப்புறத்தைப் பாதுகாப்பது மிக முக்கியமென்று கருதப்பட்டு, அதற்காகப் பெரும் பொருள் செலவிடப்பட்டது. ஒரிஸாவிலிருந்தும், பீஜபூரிலிருந்தும் படையெடுப்பு ஏற்படும் என்று எப்போதும் கிருஷ்ணராயருக்கு அச்சமிருந்து வந்தது. இந் நாடுகளுக்கும் விஜயநகரத்திற்கும் இடையே இருந்த மலைக்கணவாய்களில் சிறந்த தலைவர்களின் கீழ் சேனைகள் எப்பொழுதும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

விஜயநகரப் பேரரசின் போர்ப்படை இருவகைகளில் திரட்டப்பட்டது. அரசரால் நேரடியாகத் திரட்டப்பட்டது ஒன்று; அரசருக்குக் கீழ்ப்பட்ட பிரபுக்கள் அவசியம் நேர்ந்த காலங்களில் அரசருக்கு உதவி செய்வதற்காகத் திரட்டி அளிக்கின்ற சேனை மற்றென்று. அரசனது போர்வீரர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட்டது. பிரபுக்கள் அரசருக்கு

அனுப்பவேண்டிய சேனையின் தொகை கணக்கிடப் பட்டிருந்தது. ஆனால் அதைக் கணக்கிடுவதில் ஒரு குறிப்பிட்ட முறையும் பின்பற்றப்பட்டதாகத் தெரிய வில்லை. பிரபுக்களைத் தவிர, பேரரசின் பகுதிகளை ஆண்டுவந்த குறுநில மன்னர்களும் அரசனுக்குப் படைகள் உதவிவந்தனர்.

தலைநகரில் அரசருடைய காவலுக்காக ஒரு தனிச் சேனை இருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் அடங்கிய அச்சேனையில் காலாட்படை யினரும் குதிரைப் படையினரும் இருந்தனர். அதன் தலைவர்களுக்குச் சம்பளம் அளிக்கப்படவில்லை; நிலங்கள் மானியமாக விடப்பட்டிருந்தன.

மாகாணங்களிலும் நாயகர்களின் கீழ் அநேக சேனைத் தலைவர்கள் இருந்து வந்தனர். அவர்கள் மாவட்ட அதிகாரிகளாகவும் இருந்து வந்தனர். உதா ரணமாக மதுரைச் சீமை 72 பாளையப்பட்டுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் ஒன்றான பாஞ் சாலக் குறிச்சி பாளையக்காரர்கள் குடியில் வந்தவரே, ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டுப் புகழ்பெற்ற கட்டபொம்மன் ஆவார். பாளையக்காரர்கள் மதுரை நாயகருக்குக் கப்பம் கட்டுவதுடன் குறிப்பிட்ட அள வுள்ள சேனையையும் அனுப்பவேண்டிய பொறுப்பு உடையவர்களாயிருந்தனர்.

அநேக அந்தணரும் விஜயநகர சேனையில் முக்கிய பொறுப்பு வகித்து வந்தனர். கிருஷ்ண ராயரின் மந்திரியாயிருந்த சாளுவதிம்மன் சேனைத் தலைவனாகவும் இருந்ததுபற்றி முன்னரே குறிப்பிடப் பட்டது.

பழங்கால இந்திய மன்னர்கள் நால்வகைச் சேனைகள் வைத்திருந்ததாக நூல்கள் கூறும். விஜய

நகர மன்னர்கள் ஆறு வகைச் சேனைகள் வைத்திருந்தனர். அவை காலாட் படை, குதிரைப் படை, யானைப்படை, பீரங்கிப் படை, ஒட்டகப்படை, எருதுப் படை என்பனவாம். இவைகளில் கடைசியாகக் கூறப்பட்ட இரண்டும் பொருள்களைத் தூக்கிச் செல்ல உபயோகப்பட்டிருக்க வேண்டுமேயன்றி, போரில் உதவியளித்திருக்க முடியாது.

13. தலைநகரச் சிறப்பு

பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த விஜயநகரத்தைப்பற்றி ஐரோப்பிய யாத்ரீகள் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் பெரிதும் உதவிபுரிகின்றன. "பிஸ்நகர் பட்டினம் நரசிங்க மன்னனுக்குச் சொந்தமானது; பெரும் மதிற்சுவர்களால் சூழப்பட்டது; மலைச் சாரலில் நிறுவப்பட்டிருந்த அப்பட்டினம் ஏழு மைல் சுற்றளவு உள்ளது; மூன்று வளையங்களாகக் கட்டப்பட்ட சுவர்களையுடையது; வாணிகத்திற்குப் பெயர் பெற்றது; மிகச் செழிப்பான நிலப்பரப்பை உடையது; மிக அழகான இயற்கைத் தோற்றம் பெற்றது. சுருங்கக் சொன்னால் அதை இரண்டாவது சுவர்க்கம் என்றே சொல்லலாம்" என்று வர்தேமா எழுதியுள்ளார். இதே கருத்தைத்தான் பர்போஸாவும் வெளியிடுகிறார்: "விஜயநகரம் மக்கட்தொகை மிக்கது. ஒருபுறம் நல்ல மதிற்சுவராலும், ஒருபுறம் ஆறாலும், ஒருபுறம் மலையாலும் அது சூழப்பட்டிருக்கிறது. சம வெளியில் இந் நகர் அமைந்துள்ளது. நரசிங்க மன்னன் எப்பொழுதும் இங்கேயே தங்கியிருக்கிறார். அவருக்கு இந்நகரில் பெரியதும் அழகியதுமான பல அரண்மனைகள் உள்ளன. அவற்றில் அரசவைக்கான பெரிய மண்டபங்களும், புல் தரைகளும், மீன்கள் நிறைந்த நீர்நிலைகளும், மலர்கள் மணமிக்க தழைகள் ஆகியவை நிறைந்த சோலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அரண்மனைகளைத் தவிர, பெரிய பிரபுக்கள் வசிக்கும் மாளிகைகள் பல காணப்படுகின்றன" என்று பர்போஸா கூறுகிறார்.

விஜயநகரத்தில் இருந்த முக்கியமான கட்டிடங்களை ரீ என்பார் ஆறு கூறுகளாகப் பிரித்துள்ளார்.

அவை கோயில்கள், தெருக்கள், அரண்மனைக் கட்டி டங்கள், கோட்டைக் கொத்தளங்கள், தனி மனிதரது வீடுகள், சமாதிகள் என்பனவாம். இவற்றுள் முதல் நான்கைத்தான் நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

அந் நாட்டின் சிறந்த சித்திர, சிற்ப வேலைப் பாடுகள் கோயில்களில்தான் காணப்பட்டன. தலை நகரில் இருந்த கோயில்களில் மிக்கப் பழமையானது விரூபாட்சருக்கு எழுப்பப்பட்டுள்ள பம்பாபதி



(Copyright Department of Archaeology)

பம்பாபதி கோயில் (ஹேமகூடத்திலிருந்து காணப்படும் தோற்றம்)

கோயில் ஆகும். விஜயநகரப் பேரரசை ஏற்படுத்தத் தனக்குத் துணைபுரிந்த வித்தியாரண்யரின் நினைவுக் காக முதலாம் ஹரிஹரன் இக்கோயிலைக் கட்டுவித் தான் என்று தெரிகிறது. ஆகவே இது 14-ஆம் நூற் றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டிருக்கவேண்டும். கட்டிட அமைப்பிலும் மற்ற வேலைப்பாடுகளிலும் இது

தென்னிந்தியக் கோயில்களை ஒத்திருக்கின்றது. "தனது முடிசூட்டு விழாவின்போது கிருஷ்ணராயர் இக்கோயிலில் ஒரு கோபுரமும், ரங்க மண்டபமும் கட்டுவித்ததாகத் தெரிகிறது" என்று அக்கோயிலுள்ள ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது. கிழக்கில் ஒன்றும், மேற்கில் ஒன்றுமாக இரண்டு பெரிய மண்டபங்கள் இருக்கின்றன. கடவுளின் சிலை இரண்டாவது மண்டபத்தில் இருக்கிறது.

இக்கோயிலுக்கு அரைக்கல் தொலைவில் **கிருஷ்ணன் கோயில்** ஒன்று இருக்கிறது. அக் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டின்படி, இதைக் கிருஷ்ணராயர் தம் உதயகிரி வெற்றிக்குப் பிறகு எழுப்பினதாகத் தெரிகிறது. உதயகிரி மலைக் கோட்டையில் இருந்த கிருஷ்ணன் சிலை ஒன்றைக் கொண்டுவந்து கிருஷ்ணராயர் இக் கோயிலை நிறுவினர். இக்கோயிலில் மிகவும் அழகான சித்திர வேலைப்பாடுகள் நிறைந்தபெரியமண்டபம் ஒன்று மிளிர்கிறது. அதைத் தவிர மற்றப் பகுதிகளில் தனிச் சிறப்பொன்றும் காணப்படவில்லை. இக்கோயிலுக்குத் தென்மேற்கில் சிறிது தொலைவில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட 35 அடி உயரமுள்ள நரசிம்ம மூர்த்தியின் சிலையொன்று நிற்கிறது. இது காண்போர் வியக்கும் அளவும் அழகும் உடையதாய் விளங்குகிறது.

அரண்மனைக்கு அருகிலுள்ள **ஹஸாரா ராமஸ்வாமி கோயில்**தான் அரசர் தனித்திருந்து வழிபடும் இடமாகும். இதிலுள்ள ஒரு கல்வெட்டிலிருந்து அக்கோயில் கி. பி. 1513 இல் கிருஷ்ணராயரால் கட்டப்பட்டதென்று தெரிகிறது. ஆனால் இக்கோயிலிலுள்ள மற்றோர் கல்வெட்டால் கிருஷ்ணராயருக்கு முன்னும் இது இருந்ததாக அறிகிறோம். ஆகவே, இது பழமை

யான ஒரு கோயிலென்றும், இதன் சில பகுதிகள் கிருஷ்ணராயரால் கட்டப்பட்டன என்றும் கொள்ளுதல் பொருந்தும். இக்கோயில் கிழக்கு மேற்காக 200 அடியும், வடக்குத் தெற்காக 110 அடியும் அளவுடையது. ஆனால் விஜயநகர காலத்து இந்து சிற்பக் கலைக்கு இக்கோயிலைப் போன்ற உயரிய சான்று வேறில்லை. இதிலுள்ள அர்த்த மண்டபம் மிக்க அழகான ஒரு கலைக் கோயிலாக விளங்குகிறது. அதன் வழ வழப்பான நான்கு தூண்களிலும் மிகச் சிறந்த வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. கோயிலில் வெளிச் சுவர்களில் இராமாயணமும், கிருஷ்ணனைப் பற்றிய கதைகளும் வர்ண சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. வைணவக் கோயிலாயினும் இதில் முருகன், கணேசன் ஆகியோர் உருவங்களும், புத்தர் உருவங்கொண்ட ஓர் அழகான படைப்புச் சித்திரமும் காணப்படுகின்றன.

துங்கபத்திரை நதியின் கிழக்குக் கரையில் விட்டல் ஸ்வாமி கோயில் இருக்கிறது. மராட்டியர் கிருஷ்ணனை விட்டல் அல்லது விடோபா என்று அழைப்பது வழக்கம். இக்கோயில் இரண்டாம் தேவ ராயருடைய காலத்ததாகும். ஆனால் கிருஷ்ணராயர் இக்கோயிலைப் புதுப்பித்துப் பல பகுதிகளைப் புதிதாகக் கட்டினர். கி. பி. 1513-14 இல் கிருஷ்ண ராயர் இக்கோயிலுக்கு நிரம்பப் பொருளுதவியும் செய்தார் எனத் தெரிகிறது. இக்கோயில் நீண்ட சதுர வடிவாய் 538 அடி நீளமும், 310 அடி அகலமும் கொண்டது. இதிலுள்ள கல்யாண மண்டபமும், மகா மண்டபமும், தூணும் கலைமேம்பாட்டால் தலை சிறந்து விளங்குகின்றன. இக் கோயில் சிறந்ததொரு கலைக்களஞ்சியம் என்பது மிகையாகாது.

இந்நான்கு கோயில்களைத் தவிர, தலைநகரத்திலும் விஜயநகரப் பேரரசுக்குட்பட்ட பல்வேறு இடங்களிலும் இருந்த எல்லாக் கோயில்களுக்கும் கிருஷ்ண ராயர் ஏராளமான பொருளுதவி செய்தார். அவர் காலத்து எழுந்த கோயில்களையும் கோயிற்பகுதிகளையும் தெற்கே இராமேசுரம் வரையுள்ள பலவிடங்களிலும் காணலாம்.

அக்காலக் கடைத்தெருக்களில் சிறந்தது, ஹம்பி கோயிலுக்கு எதிரில் ஏறத்தாழ அரைக்கல் நீளமுள்ள கடைத்தெருவாகும். மற்றொன்று கிருஷ்ணஸ்வாமி கோயிலுக்கு எதிரில் உள்ளது. இத்தெருவிலுள்ள கட்டிடங்கள் ஒரு மாடியுள்ளவை. மற்றொரு கடைத் தெரு அச்யுதராயர் கோயிலுக்கு வடக்கிலுள்ளது. இம்மூன்றைத் தவிர இன்னும் பழைய தெருக்களின் சின்னங்கள் விட்டல்ஸ்வாமி கோயிலுக்கு அருகில் இன்றும் காணப்படுகின்றன.

அரண்மனையின் அழிந்துபோன பகுதி இன்றும் நாம் வியப்புறும் வண்ணம் அமைந்துள்ளது. மஹா நவமி திப்பா என்பது ஓர் உயர்ந்த மேடையாகும். திப்பா என்னும் தெலுங்குச் சொல்லுக்கு மேடை யென்பது பொருளாகும். மஹாநவமி அல்லது நவராத்திரியின்போது அரசர் அந்த மேடையில் அமர்ந்திருந்து காட்சியளிப்பதும், அம்மேடைக்குக் கீழுள்ள மைதானத்தில் நடைபெறும் களியாட்டங்களைக் கண்டு இன்புறுவதும் வழக்கமாயிருந்தது.

விஜய புவனம், அரசவை ஆகிய இரண்டும் அரண்மனையின் மற்ற முக்கியப் பகுதிகளாகும். ஒரிஸா மன்னனான பிரதாபருத்திரனை முறியடித்த பின்னர், கிருஷ்ணராயர் தம் வெற்றியின் சின்னமாக எழுப்பிய கட்டிடம் வெற்றி மாளிகை எனப் பொருள்

பட விஜயபுவனம் என்று பெயரிடப்பட்டது. அரசவை இரண்டடுக்கு கொண்ட பெரியதொரு மாளிகையாகும். செஞ்சிக் கோட்டையில் கிருஷ்ண கிரியின் உச்சியில் அமைந்துள்ள மண்டபம் இதே போன்று அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இம்மாளிகையின் மேல்விதானம் ஒன்பது தூண் களால் தாங்கப்படுகிறது. அரண்மனையைப்பற்றிக் கூறும்பொழுது, அதிலிருந்த நீர்த்தொட்டியைப்பற்றிக் குறிப்பிடாதிருக்க இயலாது. அநேக குழாய்கள் மூலம் கமலாபுரம் என்ற இடத்திலிருந்த குளத்தி லிருந்து இத்தொட்டிக்கு நீர் கொண்டுவரப்பட்டது. இதை நினைத்துப் பார்க்கும்பொழுது, 16-ஆம் நூற் ருண்டில் நம்மனேர் பெற்றிருந்த சாதனைகள் நம்மை மகிழ்வூட்டுகின்றன.

விஜயநகரத்தை இரண்டாவது தேவராயர் ஆண்ட காலத்தில், அப்துர் ரஸாக் என்ற பாரசீக தூதர் அவர் சபைக்கு வந்திருந்தார். தலைநகரத்தைச் சுற்றி ஏழு மதிற்சுவர்கள் இருந்தனவென்று அவர் எழுதியுள்ளார். ஆனல் வர்தேமா, பேய்ஸ் ஆகிய இருவரும் "தலைநகரைச்சுற்றி மூன்று மதிற்சுவர்கள் வானளாவ எழுப்பப்பட்டிருந்தன," என்று கூறு கின்றனர். ரீ என்பாரின் குறிப்புக்களிலிருந்து பெரிய மதிற்சுவர் மட்டும் 16 கல் சுற்றளவு கொண்டது என்று அறியலாம். மதிற்சுவர்கள் மிகப் பெரிய கற்களைக் கொண்டு மிக்க உறுதியாகக் கட்டப் பட்டிருந்தன. அவற்றிற்குப் பல வாயில்களிருந்தன. ஒவ்வொரு வாயிலின் அருகிலும் சில கோபுரங்களும் சிறு படைகளும் இருந்தன. பகைவர்கள் வாயிலுக் குள் நுழைவது இயலாததாயிருந்தது.

14. தல நிருவாகம்

அந்நிய நாட்டினரின் படையெடுப்பு, பேரரசு களின் சிதைவு, உள்நாட்டுப் புரட்சி ஆகியவற்றால் பாதிக்கப்படாமல் நம் நாட்டில் ஸ்தல ஸ்தாபன அரசி யலை நடத்தி வந்தவை கிராமச் சபைகளாம். விஜய நகரப் பேரரசிலும் அவை சிறந்த முறையில் பணி யாற்றி வந்தன. அவற்றுள் ஊர்ச்சபைகள், நாட்டுச் சபைகள் என இரு பிரிவுகள் இருந்தன. ஊர்ச் சபைகளே கிராம அலுவல்களைக் கவனித்து வந்தன. நாட்டுச் சபைகள் பல கிராமங்கள் அடங்கிய ஒரு பிரிவின் அலுவல்களைக் கவனித்து வந்தன. சில கிராமச் சபைகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப் பினரைக் கொண்டவைகளாக இருந்தன. அவை மாசபைகள் என்று அழைக்கப்பட்டன.

இக் கிராமச் சபைகள் கிராமத்தின் பெயரில் நிலங்களை வாங்கவும் விற்கவும் உரிமை பெற்றிருந் தன. இதிலிருந்து கிராமத்து நிலத்தில் ஒரு பகுதி மக்களால் கூட்டாகவே அனுபவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ண இடமிருக்கிறது. இச் சபைகளின் அனுமதியின்றிக் கிராம மக்கள் நிலத்தை வாங்கவோ விற்கவோ முடியாது. ஆனால் சில இடங் களில் தனி மனிதர்களும் தங்களுக்குச் சொந்தமாகச் சிறிது நிலம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டனர்.

சில இடங்களில் அரசாங்கத்தின் வரியை வசூ லிக்கும் பொறுப்பு இச்சபைகளைச் சார்ந்ததாக இருந் தது என்று முன்னரே கூறப்பட்டது. இவ்வரிகளைத் தவிர, கிராம நன்மைக்காக இச்சபைகள் வேறு வரி களையும் விதித்து வந்தன. வரி வசூலிப்பதில் அரச னின் பிரதிநிதிகளாக இவை இருந்ததால், வரிவிதிப்

பதிலும், அரசாங்கத்தின் கொள்கையை உருப்படுத்து வதிலும் இவற்றிற்கு உரிமை இருந்தது. இச்சபைகள் நியாயமன்றங்களாகவும் வேலை செய்தன என்பது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. கோயில்கள் முதலிய கிராமப் பொதுவிடங்களை இச்சபைகளே கண்காணித்து வந்தன. கிராமப் பொது தர்மங்களை யும் இவையே ஏற்று நடத்தி வந்தன.

நாட்டுச் சபைகளின் உறுப்பினர் 'நாட்டார்' என அழைக்கப்பட்டனர் என்று தெரிகிறது. அச் சபைகளும் கிராமச்சபைகளைப் போலவே வேலை செய்தன. ஆயினும் விஜயநகரப் பேரரசில் கிராமச் சபைகளின் முக்கியத்துவம் குறைந்து வந்தது. சோழர் அரசில் இருந்தது போன்று, அவை நாட்டு அரசியலின் உயிர்நாடியாக இருக்கவில்லை என்பது புலனாகிறது.

கிராமச்சபைகளைத் தவிர, குறிப்பிட்ட தொழில் களைச் செய்துவந்த தொழிலாளர் தங்களுக்குள் தொழிற் சபைகளையும் அமைத்திருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்து வந்தவர்கள் ஒரு சாதியினராகவே இருந்ததால், அச்சபைகள் சாதிச் சபைகளாகவும் விளங்கின. இவை நகரங்களிலேயே பெரும்பாலும் காணப்பட்டன. ஆகவே அத்தொழிற் சபைகளின் உறுப்பினர்கள் 'நகரத்தார்' என்றழைக் கப்பட்டனர். ஆகவே, விஜயநகரப் பேரரசில் ஸ்தல ஸ்தாபன ஆட்சி குடியரசு முறையில் அமைந்திருந் தது மட்டுமன்றிச் சிறு நகரங்கள், கிராமங்கள் ஆகிய பலவிடங்களிலும் வேரூன்றி நிலைத்தது. ஆனால் நாளடைவில் இக் கிராமக் குடியரசுகள் வலிமை யிழந்தன. அரசாங்கமே இவற்றின் பொறுப்புக்களை யும் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தது.

15. சமூக நிலைகள்

கிருஷ்ணராயர் காலத்தில் அவர் நாட்டிலிருந்த சமூகம் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே சில சிறப்பியல்புகள் இருந்தன. முதற்பிரிவினர் அந்தணர் எனப்பட்டனர். அவர்களுள் இரண்டு வகையினர் இருந்தனர். முதல் வகையினர் சமயச் சார்பான வேலைகளில் ஊக்கங்காட்டி வந்தனர். அவர்கள் மிகவும் கற்றுணர்ந்த அறிஞர்கள். அவர்களில் பலர் கோயில்களில் வழிபாட்டுத் தொண்டு செய்து வந்தனர். அவர்கள் புலால் உண்ணுதவர்கள். ஒரே ஒரு மனைவியைத்தான் மணந்து கொள்வர். அவள் இறந்து விட்டால் வேறெந்தப் பெண்ணையும் அவர்கள் மணந்துகொள்ள மாட்டார்கள். அவர்களுடைய சொத்து அவர்களுடைய புதல்வர்க்கே உரியது. அவர்கள் தம் மார்பில் மூன்று இழைகள் அடங்கிய பூணூல் அணிந்திருந்தனர். அவர்கள் என்ன குற்றம் செய்தாலும் கடுமையாகத் தண்டிக்கப்படமாட்டார்கள். சாளுவதிம்மன் தம் குழந்தையைச் சதிசெய்து கொன்றுர் என்று நினைத்தபோதும், கிருஷ்ணராயர் அவரைக் கொல்லாது விடுத்ததற்குத் திம்மன் அந்தணராயிருந்ததே காரணம் என்று சொல்லப்படுகிறது. "இரு பிறப்பாளருடைய பாதுகாப்புக்காகத் தருமம்" என்று கிருஷ்ணராயரே குறிப்பிட்டுள்ளார்.

அந்தணருள் இரண்டாவது வகையினர் நியோகிகள் எனப்பட்டனர். இவர்கள் பெரும்பாலும் உலகியல் வேலைகளிலேயே ஈடுபட்டிருந்தனர். நிருவாகத்தில் இவர்கள் மிக்கத் திறமை வாய்ந்தவர்கள். நாட்டில்,

மிக்க உயர்ந்த பதவிகளை இவர்கள் ஏற்று நடத்தி வந்தனர். சிலர் மாகாணங்களுக்கும் நகரங்களுக்கும் தலைவர்களாயிருந்து அரசியல் நிருவாகம் நடத்தி வந்தனர். இன்னுஞ் சிலர் பெரிய வியாபாரிகளாகத் திகழ்ந்தனர். இவ்வந்தணர்களது திறமையையும், பெருமையையும் குறித்துக் கிருஷ்ணராயர் 'அமுக்த மால்யதா' என்னும் நூலில் பலவாறுகப் புகழ்ந்து கூறுகிறுர்.

அந்தணர்க்கு அடுத்தாற்போல நின்றவர்கள் க்ஷத்திரியர்கள் எனப்பட்டனர். நகரத்தின் முக்கிய பிரபுக்களும் அரசனும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

இன்னெருவகுப்பினரும் அக்காலத்தில் இருந்தன ரென்று தெரிய வருகிறது. "பட்டுக்கயிறுகள் கட்டப் பட்டு, வர்ணத் துணிகள் சுற்றப்பட்டு, ஒரு முட்டை யின் அளவுக்கு ஒரு கல்லைத் தங்கள் கழுத்தில் சிலர் கட்டிக்கொண்டிருந்தனர்," என்று பர்போஸா அவ் வகுப்பினரைப்பற்றிக் கூறுகிறுர். இவர்களுக்கு வீர சைவர்கள் என்று பெயர். இவர்கள் லிங்காயத்துகள் எனவும் அழைக்கப்பட்டனர். இப்பிரிவு 12 ஆம் நூற்றுண்டின் நடுவில் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கிற்று. இதை ஆரம்பித்தவர் பஸவர் என்பவ ராவர். அந்தணர்களின் தீவிரமான சமயக்கோட் பாடுகளை இவர்கள் எதிர்த்தனர். இவர்களுக்கு மக்கள் மிக்க மரியாதை செலுத்தி வந்தனர். "இவர்கள் என்ன தவறு செய்தாலும் கடுமையாகத் தண்டிக்கப் படவில்லை. புலாலோ, மீனே எதுவும் இவர்கள் உண்பதில்லை. இம்மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு நிறைய வாணிகப் பொருள்களையும் பணத்தையும் சிறிதும் அச்சமின்றி எடுத்துச் செல் கின்றனர்" என்று பர்போஸா கூறுகிறுர்.

கைக்கோளர்கள் என்னும் வகுப்பினர் நாட்டு அலுவல்களில் மிகுந்த அதிகாரம் உடையவரா யிருந்தனர். அவர்கள் பெரும்பாலும் நெசவுத் தொழில் செய்பவராயிருந்தனர். ஆனால் அவர் களுக்குச் சமூகத்தில் மிகுந்த செல்வாக்கு இருந்த தாகத் தெரிகிறது. காஞ்சீபுரத்திலிருந்த கைக் கோளர்கள் பல்லக்கு, சங்கு முதலிய விருதுகளை உடையவராயிருந்தனர். நெசவுத் தொழில் செய்து வந்த மற்றொரு வகுப்பினர் சௌராஷ்டிரர் எனப் பட்டனர். இவர்கள் வடக்கே குஜராத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் ஆவர். மதுரைக்கு அருகில் இவர்கள் அதிகமாகக் குடியேறினர். அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் பட்டாடைகள் விற்று, இவர்கள் செல்வம் ஈட்டினர். சமூகத்திலும் இவர்களுக்குப் பெரு மதிப்பு உண்டாயிற்று. இராணி மங்கம்மாள் காலத்தில் இவர்கள் உயர்குலத்தவர் என்று ஒப்புக் கொள்ளப்பட்டனர் என்றும், அதற்காக இவர்களுக்கு ஒரு பட்டயம் வழங்கப்பட்டது என்றும் தெரிகிறது.

மற்ற வகுப்புக்களில் முக்கியமாகச் சொல்லக் கூடியவர்கள் கம்மர்கள், நாயகர்கள், ரெட்டிகள் என்ற பிரிவினராவர். இவர்களெல்லோரும் ஒரே திராவிடக் குடியைச் சேர்ந்தவர் எனக் கருதப்படுகின்றனர். கம்மர்கள் மிகவும் தீரர்கள். இவர்களில் பலர் படை வீரர்களாகப் பணியாற்றி வந்தனர். சமூக வாழ்க்கை யில் இன்னும் சிறிது உயர்ந்த படியிலிருந்தவர்கள் நாயகர்களாவர். இவர்கள் மாகாணங்களின் கண் காணிப்பாளர்களாகவும், நாட்டின் அமைச்சர் களாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். உயர்ந்த நாயகக் குடும்பங்களுக்கும் துளுவர்களுக்கும் இடையே பல மணத்தொடர்புகள் ஏற்பட்டு வந்தன. ரெட்டிகளும்

கூட, அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை ஏற்றிருந்தனர். ஆயினும், பெரும்பாலும் அவர்கள் விவசாயம், வியாபாரம் ஆகிய துறைகளிலேயே ஈடுபட்டிருந்தனர்.

நாட்டு மக்களோடு அன்னிய நாட்டினரும் இன்பமாக வசித்து வந்தார்கள். விஜயநகரம் மிகச் சிறந்த வியாபாரத் தலமாயிருந்தது. இந்தியரும் வெளி நாட்டினரும் எளிதாக வியாபாரஞ் செய்வதற்கு விஜயநகரின் அமைப்பு மிகவும் உதவியாயிருந்தது. பல நாட்டவரும் அங்கு வந்து குழுமினர். இவ்வாறு வந்த அன்னியருள் போர்த்துகீசியர், யூதர், முகமதியர் ஆகியோர் முக்கியமானவர்களாவர். இவர்களனைவரும் முழு சுதந்திரத்துடன் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

16. சமூக வாழ்க்கை

பட்டினங்களின் பெருத்த பணக்காரர்கள் வானளாவும் பெரிய மாளிகைகளில் வசித்துவந்தனர். இம்மாளிகைகள் யாவும் நகரின் முக்கியமான தெருக்களிலே அமைந்திருந்தன. ஏழைமையில் இருந்தவர்கள் செங்கல்லால் கட்டப்பட்ட வீடுகளிலோ அல்லது மண்ணால் கட்டப்பட்டுக் கூரை வேயப்பட்ட வீடுகளிலோ வாழ்ந்துவந்தனர். இவ்வீடுகள் நகரத்தின் புறம்போக்குப் பகுதிகளில் அமைந்திருந்தன. தலைநகர் ஒன்றிலேயே ஏறத்தாழ ஓர் இலட்சம் வீடுகள் இருந்ததாகப் பேய்ஸ் என்ற ஆசிரியர் கூறுகிறார். இவற்றில் பெரும்பாலானவை தாழ்ந்த கூரையையும், ஒரு மாடியையும் உடையனவாயிருந்தன. ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் ஒரு சிறு மதிற்சுவர் எழுப்பப் பட்டிருந்தது.

அந்தணர் எவ்வுயிர்க்கும் துன்பந்தராத வகையில் உணவருந்தி வந்தனர். அவர்களுடைய உணவு மரக்கறியாலானதே. அரிசி, காய்கறி, வெண்ணெய், சர்க்கரை, வெல்லம், பால், தயிர் ஆகியவற்றையே அவர்கள் பெரும்பாலும் உட்கொண்டனர். வீர சைவர்களும் புலால் உணவை உட்கொள்ளவில்லை. மற்றையோர் மான், கோழி, வாத்து முதலிய பறவையினங்களின் இறைச்சியை உண்பர். உணவுக்கான இவ்வுயிரினங்கள் உயிருடன் விற்கப்பட்டன. சந்தைகளில் ஆடுகள் மிக மலிவாக விற்கப்பட்டன. தினந்தோறும் உணவுக்காகக் கொல்லப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கைக்கு அளவேயில்லை. பசுக்களைத் தெய்வமாகத் தொழுதுவந்ததால், அவற்றைக் கொல்லுவது தடுக்கப்பட்டது.

அக்காலத்தவர் தங்களுடைய இடுப்புக்குக் கீழே பல சுருக்கங்களுடன் கூடிய ஓர் ஆடையை அணிந்திருந்தனர்; பட்டாலான தொப்பியையும், பருத்தி அல்லது பட்டாலான ஒரு நீண்ட சட்டையையும் அணிந்து வந்தனர். பருத்தி அல்லது பட்டாலான ஒரு மேலாடையையும் அணிவர். காலில் அனைவரும் செருப்புக்கள் அணிவர். ஆனால் ஏழைகள் இடுப்பின்கீழ் ஒரு துணியைக் கட்டிக்கொள்வர். உடலின் மற்றப் பகுதிகளெல்லாம் மூடப்படாமல் இருந்து வந்தன. பணக்காரர்கள் கற்கள் பதிக்கப்பட்ட விலையுயர்ந்த சங்கிலிகள், மோதிரங்கள், மாலைகள் முதலியவற்றை அணிந்திருந்தனர். அவர்கள் வெளியே செல்லும்போது பட்டாலான குடையொன்றை வேலைக்காரன் பிடித்துக்கொண்டு செல்வான்.

இந்தியாவின் மற்றப் பகுதிகளில் இருந்தது போலவே விஜயநகரத்திலும் பெண்கள் தனித்து வைக்கப்பட்டனர். அவர்களுக்கு சமூகத்தில் பிறருடன் பழகுவதற்கு இருந்த வாய்ப்புக்கள் மிகச் சிலவே. அவர்கள் வீட்டைவிட்டு வெளியே வருவது கிடையாது. பெரிய செல்வக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் எங்கேயாவது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல நேரிடின், மூடு பல்லக்குகளில் அழைத்துச் செல்லப்பட்டனர். அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்களாயின், பல்லக்குத் தூக்குவோரும் பெண்களாகவே இருந்தனர்.

மன்னர்களும், பிரபுக்களும், சேனைத் தலைவர்களும் எத்தனைப் பெண்களை வேண்டுமாயினும் மணந்துகொள்வர். அவர்களுடைய குழந்தைகள் வாரிசுரிமையைப் பெற்றிருந்தனர். பர்போஸா, பேய்ஸ் ஆகியோரது குறிப்புக்களிலிருந்து, கணவ

னைத் தேர்ந்தெடுப்பதில் பெண்களுக்கு ஓரளவு சுதந்திரம் இருந்ததாகத் தெரிகிறது.

கணவனுக்கும் மனைவிக்குமிடையே அன்புப் பிணைப்பு மிக்கிருந்தது என்றே பல ஆசிரியர்களும் கூறுகின்றனர். கணவன் இறந்துபோனால் மனைவியும் அவனுடன் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. இது ஒரு பெரிய மதிப்பிற்குரிய செயலாகவும் கருதப்பட்டது. இப்பழக்கம் விஜயநகரப் பேரரசு முழுவதும் பரவியிருந்தது. மேநாட்டு யாத்ரீகர் பலர் இவ்வழக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றனர். பெண் ஏழையாகவோ, தாழ்ந்த குடியில் பிறந்தவளாகவோ இருந்தால் கணவனுடனே அவள் சிதையில் விழுந்து இறந்துவிடுவாள். ஆனால் உயர்குடிப் பெண்கள் கணவனுடனே எரிக்கப்படவில்லை. அவர்கள் சிலகாலம் இசை, நாட்டியம், விருந்து ஆகியவற்றை நுகர்ந்து, பின் ஒரு வெள்ளைக் குதிரையின் மீது ஏறி நகரத் தெருக்கள்வழியாக ஊர்வலம் சென்று, பின்னர் நன்காட்டை அடைவர்; அங்கே மூட்டப்பட்டிருக்கும் தீயில் எண்ணெயை ஊற்றிப் பின் அதில் மூழ்கி உயிர் துறப்பர்.

உடன்கட்டை ஏறிய பெண்களின் நினைவுக்காகச் சதிக் கற்கள் நடுவது வழக்கமாயிருந்தது. உடன்கட்டை ஏருத பெண்கள் இழிவாகக் கருதப்பட்டனர். அத்தகையோருக்குச் சமூகம் தக்க தண்டனை அளித்தது.

ஆனல், தெலுங்கர்களில் மனைவிமார் இறந்து போன கணவன்மாருடன் எரிக்கப்படவில்லை. ஆனல் உயிருடன் தம் கணவன்மாருடன் புதைக்கப்பட்டனர். “இறந்துபோன மனிதனுடைய மனைவி மிகவும் உற்சாகத்துடன் ஒரு குழியில் இறங்குகின்ருள்.

அங்கு இரண்டு பீடங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஒன்றில் கணவனையும் மற்றொன்றில் மனைவியையும் அமர்த்தி, அங்குள்ளோர் சிறிது சிறிதாக மண்ணைத் தூவிக் குழியை மூடிவிடுகின்றனர்,'' என்று நூனிஸ் கூறுகிறார்.

அரசனுடைய அந்தப்புரத்தில் பல அழகிய பெண்கள் இருந்தனர். இவர்கள் அரசியின் தோழிகளாக வேலை பார்த்துவந்தனர். அந்தப்புர நிருவாகம் முழுவதும் இவர்கள் கையில் இருந்தது. அவர்கள் விலை உயர்ந்த ஆபரணங்களை அணிந்தனர். சிலருக்கு நிலம் மானியமாக அளிக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய உண்மையான ஊதியத்தை மெச்சி, அரசர் அவர்களுக்குப் பல பரிசுகள் அளித்தார். இவர்களுள் பலர் இசையில் தேர்ந்தவர்களாக இருந்தனர். மஹாநவமி போன்ற விழாக்களில் அவர்கள் மன்னனுக்கு இசை விருந்து ஊட்டி இன்பம் அளித்துவந்தனர். பேய்ஸ் கூறுவதை நோக்குமிடத்து, இப் பெண்களில் பலருக்கு வாட்போரும், சிலருக்கு மற்போரும் தெரிந்திருந்ததாகத் தெரியவருகிறது.

17. அரசவைச் சிறப்பு

விஜயநகர மன்னர்களின் அவைகள் நாட்டின் செல்வத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கின என்பது மிகையாகாது. வெளிநாட்டு யாத்ரீகர் பலர் அரசவைகளைக் கண்டு வியந்து எழுதியுள்ளனர். நாள்தோறும் மன்னன் சிங்காதனத்தில் வீற்றிருப்பது வழக்கமாக இல்லை. பட்டாலான மெத்தைகளின்மீது அமர்ந்து மன்னர் தம் அலுவல்களைக் கவனிப்பார்; விழாக் காலங்களில் சிங்காதனத்தில் அமர்ந்திருப்பார். "எண்ணிறந்த உயர்ந்த மணிகளும், பொன்னும் சிங்காதனத்தில் இடம்பெற்றிருந்தன. ஆகவே, அது மங்கா ஒளி வீசித் திகழ்ந்தது" என்று அப்துர் ரஸாக் குறிப்பிடுகிறுர்.

அரசனைச் சுற்றி அநேக அதிகாரிகள் அமர்வது வழக்கம். அவர்களுள் ஒருவன் அரசனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்பான். அவன் அடைப்பக்காரன் என்று அழைக்கப்பட்டான். பெரிய பிரபுக்களுக்கே இந்த உரிமை அளிக்கப்பட்டது. கிருஷ்ணராயரின் அடைப்பக்காரன் 15,000 காலாட்களும் 200 குதிரைகளும் சேர்ந்த ஒரு படைக்குத் தலைவனுயிருந்தான்.

மன்னர் எப்பொழுதும் விலையுயர்ந்த ஆடைகளையே அணிந்துவந்தார். அரசனது ஆடைகளைப் பாதுகாக்கவும் கணக்கிடவும் தனி அலுவலாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அரசனும் பிரபுக்களும் விலை உயர்ந்த ஆபரணங்களை அணிந்திருந்தனர். கிருஷ்ணராயர் தம் கழுத்தில் விலை மதிக்க முடியாத நன்முத்துக்களாலான ஒரு மாலையையும் பதக்கத்தையும் அணிந்திருந்தார். சந்தனம், சவ்வாது, பன்னீர்

போன்ற வாசனைப் பொருள்கள் ஏராளமாக உபயோகிக்கப்பட்டன. வெற்றிலைக்குத் தனி மதிப்பு இருந்து வந்தது. ஆனால் விஜயநகர அரசவையில், விலைமாதரைத் தவிர வேறெவரும் மன்னன் முன்னிலையில் வெற்றிலை போட அனுமதிக்கப்படவில்லை.

மக்கள் பொழுபோக்காக அநேக விளையாட்டுக்களை மேற்கொண்டனர். மற்போர் நாடு முழுவதும் மதிப்புப் பெற்றிருந்தது. மன்னர்கள் மற்போரில் சிறந்த வீரர்களாய் விளங்கினர். கிருஷ்ணராயர் நாடோறும் ஒரு வீரனுடன் மற்போர் புரிந்து பழகுவார் என்று பேய்ஸ் குறிப்பிட்டுள்ளார். நகரங்களில் விளையாட்டுக்காகப் பல வெளியிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவை சிறந்த முறையில் பாதுகாக்கப் பட்டுவந்தன.

வேட்டையாடுதல் அரசனுக்கும் பிரபுக்களுக்கும் மட்டுமன்றி, எளிய மக்களுக்கும் பொழுதுபோக்காக அமைந்திருந்தது. யானைகள், காட்டுப் பன்றிகள், மான்கள் ஆகியவை வேட்டையாடப்பட்டன. கழுகுகளின் உதவியைக்கொண்டு மக்கள் பறவைகளை எளிதில் வேட்டையாடுவர். குதிரைச் சவாரி செய்வதும் ஒரு சிறந்த பொழுதுபோக்காக இருந்தது.

நாடகம் மிக்க முன்னேற்றம் அடைந்திருந்தது. **கங்காதரன்** என்னும் கவிஞர் ஒரு சிறந்த நாடகம் எழுதினர். அதற்காக அவருக்குத் தங்க நாணயக் குவியல் ஒன்று பரிசாக அளிக்கப்பட்டது. கிருஷ்ணராயர் எழுதிய **ஜாம்பவதி பரிணயம்** என்ற வடமொழி நாடகம் வசந்த விழாவின்போது தலைநகரில் நடித்துக் காட்டப்பட்டது. நாட்டியமும் உச்சநிலையில் இருந்தது. அரண்மனையிலிருந்த நாட்டிய மண்டபம் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்ததாக

இருந்தது. இவை தவிர வேறு அழகுக் கலைகளும் மக்களிடம் பரவியிருந்தன.

இசை விஜயநகர மன்னர்களால் பெரிதும் ஆதரிக்கப்பட்டு வந்தது. கிருஷ்ணராயர் இசையில் கைதேர்ந்தவர். கிருஷ்ணன் என்ற இசைவல்லுநரிடமிருந்து அவர் வீணை வாசிக்கக் கற்றுக்கொண்டார் என்று கூறப்படுகிறது. வாதிராஜர், புரந்தரதாஸர், கனகதாஸர் முதலிய பல பெரியோர்கள் இசைக் கலையை வளர்த்துவந்தனர். இவர்களால் இயற்றப்பட்ட இசைப்பாடல்கள் இன்றளவும் மக்களால் போற்றப்பட்டு வந்துள்ளன.

18. கல்வியும் இலக்கியமும்

பழங்கால இந்தியாவிலும் சரி, மத்திய கால இந்தியாவிலும் சரி, அரசாங்கம் பொது மக்களுடைய கல்வியில் அதிக கவனம் செலுத்தவில்லை. விஜயநகர ராஜ்யத்திலும் கல்விக் கூடங்கள் தனிமனிதர்களாலேயே நடத்தப்பட்டன.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளுக்கு அங்கே எண்ணும் எழுத்தும் கற்றுக் கொடுக்கப் பட்டன. மற்ற நாடுகளில் காகிதம், பேனா முதலியன உபயோகப்படுத்தப்பட ஆரம்பித்த பிறகும், இத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பாடங்கள் வாய் மொழியாகவே கற்றுக் கொடுக்கப்பட்டன. மாண வர்கள் மணலில் தங்கள் விரல்களால் எழுதிப் பழகினர்.

கிருஷ்ண தேவராயர் காலத்தில் வந்த போர்த்து கீசியரைப் பின்பற்றி கிருத்தவப் பாதிரிமார்கள் தங் கள் மதத்தைப் பரப்புவதற்காகத் தென்னிந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் ஆங்காங்கே தமிழ், தெலுங்கு மொழிகளைக் கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களை நிறுவியதாகத் தெரிகிறது. பெர்னன்டஸ் என்னும் பாதிரியார் மதுரையில் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் நடத்தி வந்தார். திண்ணைப் பள்ளிக்கூடத்துடன் எழுத்துப் படிப்பு அனேகமாக முடிவடைந்தது. அதன் பின் ஒவ்வொரு சாதியினரும் தங்கள் சாதித் தொழிலைக் கற்று அதில் தேர்ச்சியடைந்தனர்.

பிராமணர்களுக்கு வேதங்கள், சாஸ்திரங்கள் இவற்றைக் கற்பிப்பதற்கு ஆங்காங்கே பாடசாலைகள்

இருந்தன. உதாரணமாக வேலூரில் ஸ்ரீ கண்டர் பேருரையைக்' கற்பிப்பதற்கு அப்பய்ய தீட்சிதரால் நிறுவப்பட்ட பாடசாலை ஒன்று இருந்தது. சில பாடசாலைகள் கோயில்களால் நடத்தப்பட்டன. இப்படிப்பட்ட பாடசாலைகளுக்கு அரசர்கள் மானி யங்கள் கொடுத்து உதவி புரிந்ததாக அறிகிறோம். கடைச்சங்கம் இருந்த தென் மதுரை, விஜயநகர அரசு காலத்திலும் சிறந்த கல்விக்கூடமாகத் திகழ்ந்தது.

கோயில்களில் மக்களுக்கு மத அறிவை ஊட்டு வதற்காக இராமாயணம், பாரதம் போன்ற இலக்கியங் களையும், பிரபந்தங்கள் போன்ற நூல்களையும் ஒழுங் காகப் படிக்கும் வழக்கம் இருந்தது. பூசை காலங் களில் தேவாரம், பாசுரங்கள் இவற்றைப் பாடுவதற் காகச் சிலருக்கு மானியங்கள் விடப்பட்டிருந்தன.

எழுதுவதற்குப் பனையோலையே பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டது. பனையோலையைக் கெடாமல் பாதுகாக்கும் முறையை மக்கள் நன்கு அறிந்திருந் தனர். விஜயநகர காலத்தில்தான் போர்த்துகீசிய பாதிரிமார்களால் அச்செழுத்து முதன் முதலில் தென் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது.

16 ஆம் நூற்றுண்டில் பொதுவாக விஜயநகரமும், சிறப்பாக அதன் தலைநகரும் கல்விக் களஞ்சியங்களாக விளங்கின. கிருஷ்ணராயர் கல்வியை ஆதரிப்பதில் சலியாதவர்; மிகுந்த ஆர்வத்துடன் அறிஞர்களை மேன்மேலும் ஊக்குவித்துப் பல புதிய நூல்களை இயற்ற அவர்களுக்கு உதவி செய்தார். அவரது அவையில் எல்லாமொழிப் புலவரும் வந்து குழுமினர். அரசவையில் எப்பொழுதும் சுவைமிகுந்த சொற்போர் நிகழ்ந்த வண்ணமாகவே இருந்தது. கிருஷ்ணராய

ருடைய அவையில் அஷ்டதிக்கஜங்கள் என்ற சிறப்புப் பெயர் பெற்ற தெலுங்குக் கவிஞர் எண்மர் இருந்தனர். இவர்கள் சொற்சுவையும் பொருட் சுவையும் செறிந்த பல கவிதைகளை இயற்றியுள்ளனர்.

கிருஷ்ணராயருடைய ஆதரவில் வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய நான்கு மொழி களும் வளம்பெற்றன. கிருஷ்ணராயர் தாமே ஆறு வடமொழி நூல்களை இயற்றியுள்ளார். இதுபற்றி முன்னரே கூறப்பட்டுள்ளது. அவருடைய முத லமைச்சராயிருந்த சாளுவதிம்மன், **பால பாரத வியாக்யம்** என்ற அரிய நூலை இயற்றினர். **சந்திரிகா** என்ற நூலை இயற்றிச் சிறப்புற்ற **கோபன், லோல லட்சுமிதரர், லட்சுமிநாராயணு, சூரண்ணு, ஹரிபட்டர், ராஜநாத திண்டிமர், திருமலாம்பா, அப்பய்யதீட்சிதர், வாதிராஜர்,** ஆகியோர் கிருஷ்ணராயர் அவையில் இருந்த வட மொழிப் புலவருள் தலைசிறந்தவராவர். தஞ்சாவூரை ஆண்டுவந்த **ரகுநாத நாயகர்,** என்னும் சிற்றரசரும் வடமொழியில் சிறந்த புலவராக இருந்தார். **பாரி ஜாதாபஹரணம், வால்மீகி சரித்திரம், நளசரித் திரம்** முதலிய அனேக நூல்களை அவர் இயற்றி யுள்ளார். அவர் சங்கீதத்திலும் சிறந்த புலமை பெற்றிருந்தார்.

கிருஷ்ணராயர் 'அமுக்த மால்யதா' என்ற தெலுங்கு நூலை எழுதித் திருப்பதி வேங்கடேசருக்குச் சமர்ப்பித்தார். அது தெலுங்கு மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகும். அஷ்டதிக் கஜங்கள் என்ற தெலுங்குக் கவிஞர் எண்மர் பல அரிய நூல்களை இயற்றினர். அவர்களுள் தலைசிறந்து விளங்கியவர் அரசவைக் கவிஞராயிருந்த அல்லஸானி

பெத்தண்ணு என்பவராவர். தெலுங்கு மொழியில் காவியம் இயற்றுவதில் பல புதிய முறைகளை அவர் புகுத்தியதாகத் தெரிகிறது. அவர் **ஆந்திர கவிதா பிதாமஹுர்** என்று அழைக்கப்படுகிறூர். அவரைத் தவிர **நந்தி திம்மண்ணு, துர்ஜாதி, பிங்கலி சூரண்ணு, தெனுலி இராமகிருஷ்ணு** என்போர் குறிப்பிடத்தக்க சிறந்த புலவர்களாவர். கடைசியாகக் குறிப்பிடப்பட்ட தெனுலி இராமகிருஷ்ணுவே பிரசித்தி பெற்ற தெனுலிராமன் என்று தெரிகிறது. சிறந்த புலவராயிருந்ததுடன் அவர் தமது விகடங்களாலும் அரசரை மகிழ்வித்து வந்தார்.

கன்னட மொழியிலும் தலைசிறந்த புலவர் பலர் கிருஷ்ணராயருடைய ஆதரவைப் பெற்று விளங்கினர். அவர்களுள் **திம்மன்ன கவி, சாந்திகீர்த்தி, ஓதுவகிரியா, பொம்போயலக்கா, வீரபத்ர ராஜா, மல்லணுர்யா, குமார வால்மீகி, ஸ்ரீதர தேவா** என்போர் சிறந்தவர்களாவர்.

மற்ற மொழிகளைப் போலவே தமிழும் கிருஷ்ணராயருடைய ஆட்சியில் வளர்ச்சியுற்றது. அதற்குத் தக்க ஆதரவும் மதிப்பும் அளித்து வந்தார் அரசர். **திருமலைநாதர், பரஞ்சோதியார், செவ்வைச் சூடுவார், தத்துவப் பிரகாச சுவாமிகள், ஹரிதாஸர், ஞானப் பிரகாச தேசிகர், மண்டல புருஷர், குமார சரஸ்வதி, வீரகவிராசர், பெருமாள் கவிராயர், கவிராச பண்டிதர்** ஆகியோர் தமிழில் நல்ல கவிதை நூல்களை இயற்றி வந்தனர். இவர்களுள் பலர் தாமியற்றிய நூல்களில் கிருஷ்ணராயருடைய உதவிக்கு நன்றி செலுத்தியும், அவருடைய பெருமைகளைப் பலபட விரித்துரைத்தும் இருப்பதால், தமிழ் மொழி ஆக்கத்திற்குக் கிருஷ்ணராயர் தகுந்த உதவி

அளித்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. மேற்கூறிய புலவருள் சிலர் அவ்வரசரைப் பற்றியே முழு நூல்களையும் இயற்றியுள்ளனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, கிருஷ்ணராயர் ஆட்சியில் பல்வேறு மொழி இலக்கியங்களும் தழைத்தோங்கி வளர்ந்தன. குறிப்பாகத் தெலுங்கு இலக்கியத்தின் சரித்திரத்திலே அது ஒரு புது சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தது. ஏனெனில், அதற்கு முந்திய காலத்தில் தெலுங்கில் இயற்றப்பட்ட நூல்களனைத்தும் வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்புக்களாகும். ஆனால் கிருஷ்ண ராயனுடைய ஆட்சியில் எழுந்த நூல்களில் புதிய கருத்துக்களும் புதிய மனோவேகமும் காணப்படு கின்றன. தென்னாட்டு இலக்கியச் சரித்திரத்திலே கிருஷ்ணராயருடைய ஆட்சியைப் 'பொற்காலம்' என்று கூறுவது பொருந்தும்.

இடைக்காலத்து ஐரோப்பாவிலிருந்த மடங்களைப் போல, நம் நாட்டில் இருந்த பல்வேறு அற நிலையங் களும் மடங்களும் பதினாறும் நூற்றாண்டில் விழிப் படைந்தன. புத்துணர்ச்சி பெற்ற கல்வி பரப்பும் உயர் நிலையங்களாக அவை திகழ்ந்தன. அங்கு அளிக்கப்பட்ட கல்வி சமயச் சார்பானதாயிருந்தது. எனினும், அவை நாட்டின் அறிவு வளர்ச்சியில் பெரி தும் துணை புரிந்தன.

19. சமய வாழ்க்கை

கிருஷ்ணராயருடைய பேரரசில் மக்களின் சமய வாழ்க்கை எவ்வாறிருந்தது என்பதை நாம் ஆராய்வோம். அவர் தம் நாட்டிலிருந்த எல்லாச் சமயத்தினரையும் சமமாகக் கருதினர். முகமதியர், கிருத்துவர், யூதர் ஆகிய பலரும் முழுச் சமய சுதந்திரத்துடன் வாழ்ந்தனர். அவர்களுடைய சமய வாழ்க்கையில் அரசாங்கம் எவ்வகையிலும் தலையிடவில்லை. சைவம், வைணவம் ஆகியவற்றுள் விஜயநகரத்தில் பெரும்பான்மையோருடைய சமயமா யிருந்தது வைணவமேயாகும். அதற்குக் காரணம் வைணவ சமயத் தலைவரான இராமானுஜரும் அவர்களுடைய சீடர்களுமே ஆவர். சிருங்கேரி மடத்தலைவராயிருந்த வித்தியாரண்யர் விஜயநகரத்தைத் தோற்றுவிப்பதற்குப் பேருதவி புரிந்தார். மற்றும் பல சிறந்த சமயாசாரியர்கள் விஜயநகரப் பேரரசில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய நூல்கள் மக்களை நல்வழிப்படுத்தின. இவ்வாறாக இந்து சமயம் தழைத்தோங்கியது.

சைவர்களுக்குள் பல உட்பிரிவுகள் இருந்தன என்று அறிகிறோம். சங்கரரின் தத்துவத்தைப் பின்பற்றிய மக்கள் அத்துவைதிகள் என்று அழைக்கப்பட்டனர். சைவ ஆகமங்களைப் பின்பற்றி வந்த ஒரு சாரார் பாசுபதர் என்று அழைக்கப்பட்டனர். வீர சைவர்கள் அல்லது லிங்காயத்துகள் என்ற ஒரு வகையினர் சிறப்புடன் வாழ்ந்தனர். இவர்களைப் பற்றி முன்னரே விரிவாகக் கூறப்பட்டது. **மெய்கண்டார்** இயற்றிய சிவஞான போதத்தை அடிப்படையாகக் கொண்ட சைவ சித்தாந்திகளும் நாட்டில் வாழ்ந்து வந்தனர்.

வைணவர்களில் இரு முக்கிய பிரிவுகள் இருந்தன. வடகலையினர் ஒரு பிரிவினர்; தென்கலையினர் மற்றொரு பிரிவினர். வடகலை வைணவர்கள் வடமொழியையும், தென்கலை வைணவர்கள் தமிழையும் முக்கிய மொழியாகக் கொண்டிருந்தனர். அவர்கள் பின்பற்றி வந்த சமய கருத்துக்களிலும் ஓரளவு வேறுபாடுகள் தோன்றலாயின. ஆயினும், கிருஷ்ணராயர் அளித்த ஆதரவாலும், அக்காலத்திலிருந்த வைணவப் பெரியாரது பெரு முயற்சியாலும் வைணவம் மிக்க பலம் பெற்று வளர்ந்தது.

மத்வர், வல்லபாசாரியர் ஆகிய இருவருடைய புகழும், கொள்கைகளும் நாட்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. வல்லபாசாரியர் கிருஷ்ணராயர் காலத்தில் வாழ்ந்து வந்தவர். அவர் விஜயநகரத்திற்குச் சென்றபோது, அநேக சைவர்களோடு வாக்கு வாதம் செய்யுமாறு அரசர் அவரைத் தூண்டினார். இவ்வாக்கு வாதத்தில் அவர் பெரு வெற்றி பெற்றதால் அவர் வைணவர்களால் தம் தலைவர் எனப் பெரிதும் போற்றப்பட்டார். இதன் பின்னர் பல சைவர்கள் வைணவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினர். கிருஷ்ணராயரின் அரசவைக் கவிஞராயிருந்த அல்லஸானி பெத்தண்ணா வைணவத்தைத் தழுவியது இதற்குத் தக்க சான்றாகும். விஜயநகரத்தில் சமணர்கள் சிலரும் இருந்தனர். ஆனால் அவர்களை வைணவர்களும் வீர சைவர்களும் ஒருசிறிது துன்புறுத்தி வந்தனர் என்றே சில ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் கிருஷ்ணராயரைப் பொறுத்த வரையில் எல்லாச் சமயத்தினரும் இன்புற்று வாழவேண்டும் என்றே அவர் விரும்பினார்; அதற்கு ஏற்பத் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டார்.

கிருஷ்ணராயர் ஒரு சிறந்த வைணவர். அவர் தம் தலைநகரிலிருந்த வைணவக் கோயில்களுக்கு அளித்த உதவியைப் பற்றி முன்னரே கூறப்பட்டது. அவர் திருப்பதிக்கு ஏழு முறை சென்றிருந்ததாகத் திருப்பதி—திருமலை தேவஸ்தானக் கல்வெட்டுக்கள் ஐயமறக் காட்டுகின்றன. கி. பி. 1513 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாளன்று கிருஷ்ணராயர் தம்மிரு அரசியருடன் திருமலைக்குச் சென்றிருந்தார். அவ்வமயம் பொன்னாலானதும், நவமணிகளால் இழைக்கப்பெற்றதுமான ஒரு முடியையும், 25 பொன் தட்டுக்களையும் அவர் கோயிலுக்கு வழங்கினார். அதே ஆண்டு மே மாதம் 2 ஆம் நாளன்று கிருஷ்ணராயர் இரண்டாம் முறையாகத் திருமலைக்குச் சென்று, மூன்று சிறிய பொன் முடிகளையும், மற்றும் பல அணி கலன்களையும் கோயிலுக்குத் தந்தார். மறுபடியும் அவ்வாண்டு ஜூன் மாதம் 13 ஆம் நாளன்று மூன்றும் முறையாகத் திருமலைக்குச் சென்ற கிருஷ்ண ராயர், தம் பெற்றோர் சாந்தி அடையும் பொருட்டு ஐந்து கிராமங்களைக் கோயிலுக்கு மானியமாக அளித்து, அவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு தை மாதத்தில் ஒரு பெரு விழாவை நடத்த ஏற்பாடு செய்தார்.

பிரதாபருத்ர கஜபதியைத் துரத்தியடித்து, உதய கிரிக் கோட்டையைக் கைப்பற்றிய பின்னர் தன் தலை நகருக்குத் திரும்பிவரும் வழியில் கிருஷ்ணராயர் நான்காம் முறையாகத் திருமலைக்குச் சென்றிருந்தார் (1514, ஜூலை). அவ்வமயம் அரசர் 30,000 வராகன் களைக் கொண்டு கடவுளுக்கு பொன் அபிடேகம் நடத்தினார்; மேலும் தலபாக்கம் என்ற கிராமத்தைக் கோயிலுக்கு மானியமாக விடுத்தார். பின்னர்

1517 ஆம் ஆண்டிலும் 1518 ஆம் ஆண்டிலும் கிருஷ்ணராயர் தம் மூத்த அரசியோடு திருமலைக்குச் சென்றிருந்ததாக தெரிகிறது. இறுதியாக 1521 ஆம் ஆண்டில் அவர் திருமலைக்குச் சென்றார் என்றும், கோயிலுக்கு நவமணிகள் இழைத்த ஒரு பொன் னுடையையும், முத்துக்கள் பதித்த முடியையும், நவமணிப் பதக்கத்தையும், 10,000 வராகன்களையும் அளித்தார் என்றும் அறியகிடக்கிறது. கிருஷ்ணராய ருக்கும், அவருடைய இரு மனைவியருக்கும் பெரிய செப்புச் சிலைகள் திருமலைக் கோயிலில் நிறுவப்பட் டுள்ளன. அங்குச் செல்வோர் இன்றும் அவற்றைக் காணலாம்.

தவிர, அஹோபிலத்திலுள்ள நரசிம்மர் கோயி லுக்கும் காஞ்சிபுரத்திலுள்ள வரதர் கோயிலுக்கும் கிருஷ்ணராயர் பல மானியங்கள் எழுதி வைத் துள்ளார்.

தாம் வைணவ சமயத்தில் ஈடுபட்டவராயினும், சைவக் கோயில்களிலும் கிருஷ்ணராயர் பல திருப் பணிகள் ஆற்றியுள்ளார். சோழ மண்டலத்திலிருந்து தமக்கு வரும் வரிப் பணத்தில் பெரும் பகுதியை அங்குள்ள சைவ, வைணவக் கோயிற் பணிகளுக் கென்றே ஒதுக்கி வைத்துவிட்டார். சிதம்பரத்துப் பெரிய கோயிலின் வடக்குக் கோபுரத்தின் மேற் பகுதியை 1917 இல் அவர் கட்டி முடித்தார். அங் குள்ள ஆயிரக்கால் மண்டபமும் அவர் காலத்தில் தான் கட்டப்பட்டது. திருக்காளத்தி கோயிலில் ஒரு நூறுகால் மண்டபத்தையும் பெரிய கோபுரத்தையும் கிருஷ்ணராயர் கட்டுவித்தார். மற்றும் திருவண்ணு மலை கோயிலில் காணப்படும் ஆயிரக்கால் மண்டப மும், 217 அடி உயரமுள்ள பெரிய கோபுரமும்

கிருஷ்ணராயரின் திருப்பணிகளாம். குடந்தையி லுள்ள சைவக் கோயில்களுக்கும், தம் தலைநகரி லிருந்த விநாயகர் கோயிலுக்கும், விரூபாட்சர் கோயி லுக்கும், அவர் வரையாது பொருள் வழங்கினர். இவை மட்டுமன்றி, சமணப் புலவர் சிலருக்குக் கிருஷ்ணராயர் பொருளுதவி அளித்துச் சமண சமயக் கருத்துக்களைத் திரட்டித்தர ஏற்பாடு செய்தார் என்று நெல்லூர் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

விஜயநகரப் பேரரசில் தலைசிறந்து விளங்கிய மடம் சிருங்கேரி மடம் ஆகும். இது ஆதி சங்கரரால் ஏற்படுத்தப்பட்டது. விஜயநகர மன்னர்கள் இம் மடத்துத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மற்றொரு அத்துவைத மடமாகிய காஞ்சி காமகோடி பீடமும் கிருஷ்ணராயருடைய ஆதரவு பெற்றிருந்தது. கிருஷ்ணராயர் 1522 இல் காஞ்சி மடத்திற்கு இரு கிராமங்களை மானியமாகத் தந்தார். இவற்றைத் தவிர திருவாவடுதுறை, தரும புரம் ஆகிய இடங்களிலிருந்த சைவ மடங்களும் அவருடைய ஆதரவைப் பெற்றிருந்தன.

சிவன், திருமால் ஆகிய தெய்வங்களுக்கு அடுத்தாற்போல, துர்க்கை அல்லது காளிக்கு மிகுந்த பக்தியுடன் பலவேறு இடங்களிலும் வழிபாடு நடை பெற்று வந்தது. ஆடுகள் அத்தெய்வத்திற்குப் பலி யாகக் கொடுக்கப்பட்டன. அத்தெய்வத்தின் அருளைப் பெறும் பொருட்டே துர்க்கை வழிபாடும், அதன் சிறந்த திருவிழாவான மஹநவமியும் விஜயநகரப் பேரரசு எங்கும் வெகுவிமரிசையாக நடைபெற்றன. எல்லாக் கோயில்களிலும் வருடந்தோறும் பெரும் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. திருவிழாக்கள் தேர்த் திருவிழாவுடன் முடிவடைவது மரபாயிருந்தது.

இவை தவிர, தீபாவளி, தெலுங்குப் புத்தாண்டுப் பிறப்பு, மஹாநவமி அல்லது நவராத்திரி ஆகியவை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இத்திரு விழாக்களில் எல்லாம் மக்கள் திரள் திரளாகக் கூடுவர். அரசரும் வந்திருந்து, மக்களுடன் கூடிக்களித்து, திருவிழாவில் ஈடுபடுவார்.

L18

Checked
111220

[illegible]
1-11-90

KRISHNADEVARAYAR

BY

K. S. NAGARAJAN

RAMNATH PUBLISHING HOUSE

TEPPAKULAM : : TIRUCHIRAPALLI

 1952